*பார்வைக்கு...*


சஞ்சிகை : இளவேனில்

எட்டாம் பதிப்பு : 18 ஜூலை 2015

வெளியிடுவோர் : கேசி தமிழ் மன்றம்

வடிவமைப்பு : க.பார்த்தீபன்

அட்டைப்படம் : இ.பார்த்தீபன்

ஆக்கப்படம் : பா.மயூரன்

தொடர்புகட்கு : கேசி தமிழ் மன்றம்
PO BOX 2516,
Fountain Gate, Vic - 3805


# பொருளடக்கம்


| ஆக்கம் | பக்கம் |
|---|---|
| ☐ வணக்கம் | 03 |
| ☐ தலைவரின் உரை | 04 |
| ☐ தந்தையர் தினம் | 05 |
| ☐ தமிழின் இனிமை | 08 |
| ☐ என்ன தவம் செய்தோமடி | 09 |
| ☐ நன்றி உள்ள நாய் | 09 |
| ☐ தமிழ்க்கலை | 10 |
| ☐ மது | 11 |
| ☐ கடற்கரையோரம் | 12 |
| ☐ நேபளத்தின் பூமி அதிர்ச்சி | 12 |
| ☐ பழந்துணியின் சுயசரிதை | 13 |
| ☐ எனது தமிழ்ப் பாடசாலை | 14 |
| ☐ ஆடி அழைக்கின்றது | 15 |
| ☐ எனக்கு ஒரு நாய்க்குட்டி இருந்தால் | 17 |
| ☐ மாலாவும் வானவில்லும் | 17 |
| ☐ நான் ஒரு கிளியாக இருந்தால் | 18 |
| ☐ பூக்கள் | 18 |
| ☐ உயிரினும் | 19 |

# பொருளடக்கம்


| ஆக்கம் | பக்கம் |
|---|---|
| ☐ ஆடிப்பிறப்பு | 20 |
| ☐ நவராத்திரி | 20 |
| ☐ மம்மி i want தண்ணி | 21 |
| ☐ தாவரங்களின் பயன்கள் | 23 |
| ☐ ஆடிப்பிறப்பு | 24 |
| ☐ நான் | 24 |
| ☐ மனிதாபிமானம் | 25 |
| ☐ கடற்கரை | 28 |
| ☐ நான் கலந்துகொண்ட திருமண விழா | 29 |
| ☐ நாய் | 30 |
| ☐ தமிழரின் விழாக்கள் | 31 |
| ☐ நண்பன் இல்லை | 32 |
| ☐ துடுப்பாட்டம் | 33 |
| ☐ பாரதி பள்ளி | 33 |
| ☐ குதிரை | 34 |
| ☐ நான் | 34 |
| ☐ காத்திருப்பாள் தொலைதூர தென்றலுக்காய் | 35 |
| ☐ எனது விருப்பமான விளையாட்டு | 36 |
| ☐ பிரசவம் | 37 |
| ☐ நான் அறிந்தவை | 37 |
| ☐ பாரதி பள்ளியின் 20ஆவது ஆண்டு நிறைவு விழா | 38 |
| ☐ எனது குடும்பம் | 38 |
| ☐ கனவுகள் | 39 |
| ☐ மயக்கம் வேண்டாம் சாருமதி | 41 |
| ☐ எனது பாடசாலை | 44 |
| ☐ பாரதி பள்ளி | 44 |
| ☐ இது தான் பாசமா | 45 |
| ☐ மீன் தொட்டி | 48 |
| ☐ பட்டியல் | 49 |
| ☐ புத்தகத்தின் சுயசரிதை | 54 |
| ☐ ஆறு (தொடர் கதை) | 55 |
| ☐ உயர்திடுவோம் வாழ்வினிலே | 58 |

# இளவேனில்

## வணக்கம்..

கேசி தமிழ் மன்றத்தின் அரையாண்டு வெளியீடான இளவேனில் சஞ்சிகையின் எட்டாவது மலரோடு வாசகர்களாகிய உங்களை சந்திப்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றோம்.

அவுஸ்திரேலியாவில் தமிழ் மொழியும் பண்பாடும் நிலைத்திருக்க உழைத்துக்கொண்டிருக்கும் கேசி தமிழ் மன்றத்தின் செயற்பாடுகளில் கலை கலாச்சார பண்பாடுகளை அடுத்த தலைமுறைக்கு எடுத்து செல்லுதலும் ஒன்றாகும்.

அந்தவகையில் இளவேனில் சஞ்சிகை, அடுத்த தலைமுறை தமிழ் மொழியை கற்றல், எழுதுதல், பேசுதல் ஆகியவற்றுக்கு உதவுதோடு மட்டடுமன்றி, இலைமறை காயாய் நம்மிடையே இருக்கும் படைப்பாளிகளுக்கு களம் அமைத்து கொடுத்து அவர்களையும் ஊக்குவித்து கொண்டிருக்கின்றது என நம்புகின்றோம். இதற்கு சான்று பகிரும் வகையில் இந்த இளவேனில் சஞ்சிகை அதிகமான மாணவர்களின் ஆக்கங்களை தாங்கிவருவது மிகவும் மகிழ்ச்சியளிக்கின்றது.

காலத்தின் தேவை கருதி, இப்புலம்பெயர் தேசத்தில் தமிழ் சந்ததியினர் தமிழ் மொழியையும் பண்பாட்டையும் பேணுவதற்கு கேசி தமிழ் மன்றம் முழு அர்ப்பணிப்புடன் உழைத்துக் கொண்டிருக்கிறது. இப்பாரிய கடப்பாட்டுக்கு, உங்கள் அனைவரினதும் ஆதரவையும் ஊக்கத்தையும் கேசி தமிழ் மன்றம் தாழ்மையுடன் வேண்டி நிற்கின்றது.

மேலும் வாசகர்களாகிய நீங்கள் உங்கள் கருத்துக்களை ஆசிரியர் குழுவிற்கும் படைப்பாளிகளுக்கும் வழங்கி அவர்களை ஊக்குவிக்க வேண்டும் என பணிவன்போடு கேட்டுக்கொள்கின்றோம்.

சிறுவர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் ஆக்க படைப்பாளிகள், உங்கள் ஆக்கங்களை கால கிரமத்தில் அனுப்பிவைத்து ,இளவேனில் சஞ்சிகை மென்மேலும் சிறப்புடன் வெளிவர உங்கள் உதவியை வேண்டி நிற்கின்றோம்.

நன்றி!

*ஆசிரியர் குழு*

# தலைவரின் உள்ளத்திலிருந்து.......

"தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்" என்ற பாரதியார் கூற்றுக்கேற்ப, பெருமை மிக்க நம் தாய்மொழியையும், நம் கலாச்சாரப் பண்பாடுகளையும் அவுஸ்திரேலியாவில் அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்ல கேசி தமிழ் மன்றம் கடுமையாகப் போராடிக்கொண்டிருக்கின்றது.

இதன் ஒர் அங்கமாக கேசி தமிழ் மன்றத்தினால் வெளியிடப்படுகின்ற இளவேனில் சஞ்சிகையின் எட்டாவது மலர் ஆடிப்பிறப்பு திருநாளாகிய இன்று வெளிவருவதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். இவ்விதழ் பல்வகை சிறுவர் ஆக்கங்கள், கவிதைகள், சிறுகதைகள், குறிப்புகள், கட்டுரைகள் என பலவகையான விடயங்களைச் சுமந்து வருகின்றது.

நம்மிடையே கலந்து இருக்கும் ஆற்றல் மிக்க சிறுவர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், மற்றும் ஆசிரியர்களின் பெரும் ஆதரவுடன் இளவேனில் சஞ்சிகை மிகச் சிறப்பாக தொடர்ந்தும் வெளிவர உங்கள் எல்லோரினதும் ஆதரவை வேண்டி நிற்கின்றேன்.

மேலும் இளவேனில் சஞ்சிகையின் ஆசிரியர் குழுவினர் இச்சஞ்சிகையை உன்னத இடத்திற்கு எடுத்துச் செல்ல கடுமையாக உழைத்துக் கொண்டிருக்கின்றார்கள். இவ்வேளையில் இளவேனில் ஆசிரியர் குழுவினரைப் பாராட்டுவதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். பளிச்சிடும் நட்சத்திரமாக இளவேனில் தொடர்ந்து வெளிவந்து, வரும் காலங்களில் உலகமெங்குமுள்ள புலம் பெயர் தமிழ் கலைத் திறனாளிகளின் படைப்புகளால் மெருகூட்டப்பட்டு அச்சிலும், இணையத்திலும் உலகத்தமிழ் மக்களிடையே வலம்வர வேண்டும் என்பது எமது வெகுநாள் கனவு. இக்கனவு நனவாக உங்கள் அனைவரினதும் ஆதரவினையும், அன்பையும் வேண்டி விடைபெறுகின்றேன்.

"தமிழரிடம் தமிழ் பேசுவோம், தமிழராய் வாழ்வோம்".

நன்றி.

***து. ஆதவன்***
***தலைவர்***

# தந்தையர் தினம்

பரமேஸ்வரி சச்சிதானந்தம் & சச்சிதானந்தம் சிவானந்தகுமார்

'பொறுமையுள்ள தந்தை திறமையுள்ள தலைவன்'

பெற்றோருக்கு இணையான உறவு வேறில்லை.
இறையருள் பெற்று வாழ வழிகாட்டும் வழிகாட்டிகள்.
கல்வியே அழியாத செல்வம் என்ற உண்மையை உணர்ந்தவர்.
அல்லும் பகலும் அயராது உழைப்பவர்.

வாழ்க்கைச் சக்கரத்தின் அச்சாணி தந்தை.
தாழ விடாமல் குடும்பத்தை தாங்கும் தலைவன்.
வாழ்க்கைப் படகைச் செலுத்தும் திறமையான மாலுமி.
வெளியுலகை நன்கறிந்த சிறந்த சிந்தனையாளன்.

"கற்றோரைக் கற்றோரே காமுறுவர்" தந்தை அறிந்த உண்மை.
கற்றோர் அவையில் மைந்தனை முந்தி இருத்திவைக்க முயன்றிடுவார்.
மலையே வரினும் தலையாற சுமக்கும் தன்மையர்.
தன் பிள்ளைகள் அடைந்த வெற்றி கண்டு பூரிப்படைபவர்.
எளிமையான உடையிலும் பெருமையோடு வாழும் பண்பாளர்.



“செல்வர்க்கழகு செழுங்கினை தாங்குதல்”.
உற்றவர்க்கும் பெற்றவர்க்கும் உறுதுணையாய் இருப்பார்.
மற்றவர்க்கும் உதவிடுவார். மனதைக் குளிர வைப்பார்.
நல்லவரைச் சேர்ந்திடுவார். நலம் பேணி வாழ்ந்திடுவார்.

தீயோரைக் கண்டால் தூர விலகிடுவார்.
கோபம் குறைந்திருந்தால் கோடி நலம் தேடி வரும்.
உள்ளம் உயர்ந்திருக்கும் செயலால் திறன் இருக்கும்.
பிள்ளைப் பாசம் நிறைந்திருக்கும். வாழ்வில் தென்றல் வீசி வரும்.

தந்தை ஒரு குடும்ப வங்கி. கலங்கரை விளக்கு.
பிள்ளைகளை ஏற்றி வைக்கும் மனித “ஏணி”
வரவு செலவு தெரியாது வாழவைக்கும் தெய்வம்.
வாழ்க்கை என்னும் நாடக மேடையில் சிறந்த கதாநாயகன்.

படி படி என்று பலதரம் கூறிடுவார் அன்னை
வார்த்தையிற் படிக்க வைப்பார் தந்தை
கதையைக் குறைத்திடுவார் காரியத்திற் கவனம் வைப்பார்
அலைமோதும் வாழ்க்கை வந்தால் அமைதியைக் கடைப்பிடிப்பார்.

கொண்டாட்ட தினம் வந்தால் குதூகலம் நிலவ வைப்பார்.
பரிசில்கள் கொணந்திடுவார் பலரையும் மகிழவைப்பார்.
வெளியே அழைத்துச் செல்வார் வேண்டியது தந்திடுவார்.
நட்போடு பழகிடுவார் நல்லனவே செய்திடுவார்.

இருந்தாலும் இறந்தாலும் “அப்பா” அப்பாதான்
மறைந்தாலும் மனதிலே மறவாமல் வாழ்ந்திருப்பார்.
கூறிவைத்த புத்திமதி கூட நின்று உதவி செய்யும்.
மந்திரம்போல் ஒலிக்கும் மனதில் ஒளி தெரியும்.

கல்விக் கடல் கரை காண வேணுமெனில்
திரை கடல் ஓடியும் திரவியம் தேடுவார், தந்தை,
கரை கண்டு வெற்றி பெற்றால் மகிழ்ச்சிக் கடலில் மூழ்கிடுவார்.
இயலும்வரை போராட்டம், இதுதான் மனித வாழ்வு.

போராட்டம் இன்றேல் நீரோட்டத்தில் மூழ்கிடுவோம்
ஆட்டம் முடியும்வரை ஆடித்தான் ஆகவேண்டும்.
அடி சறுக்கிவிட்டால் அனைவரையும் ஆழ்த்திவிடும்.
நல்லதொரு குடும்பம் பலகலைக் கழகம் என்பார்.

தந்தை ஒரு வற்றாத நீரூற்று
புஜவலிமை மனவலிமை ஆண்களின் சிறப்புரிமை
இதயத்தை குளிரவைக்கும் உதய சூரியன் தந்தை.
வாழ்க்கைப் பயிரை வளர்க்கும் வருண பகவான்.

அழகு நிலைகள் அப்பாவிற்கு அவசியமில்லை.
இயற்கை அழகு இறைவன் கொடுத்த வரம்
ஆலயங்கள் செல்வார், அங்கேயும் சேவை செய்வார்.
தேவையுள்ள இடமெல்லாம் சென்று துணை நிற்பார்.

காட்டு மிருகங்களின் தலைவன் சிங்கம்
சிறந்த தந்தை வீட்டிற்கு சிங்கம்
குடையோடு வரும்போது குளிர் நிலவு போலிருக்கும்
நடந்தாலும் அழகு இருந்தாலும் அழகு
அப்பாவின் வீரத்தை அவரின் விழி சொல்லும்
கையில் பொல்லிருக்கும் கண்டால் பயமிருக்கும்


தந்தையின் ஆசி பெற்றால் தலைமுறை தழைத்தோங்கும்.
தந்தை மனம் சோர்ந்துவிட்டால் தோல்வி தொடர்ந்து வரும்
நல்ல மனமிருந்தால் நல்லவர்கள் போற்றிடுவார்.
நல்லுறவு தேடி வரும் மன அமைதி கூடி வரும்.

பெற்றோரைப் பேணுவோம் பெருமையுடன் வாழுவோம்.
நாளெல்லாம் தந்தையை நன்றியுடன் போற்றுவோம்.
"தந்தை தினம்" வந்ததால் அது அனைவர்க்கும் பொன்நாள்
பூங்கொத்துக்களுடன் செல்வோம், வாழ்த்தி வணங்கிடுவோம்.

# தமிழின் இனிமை

—துவாசகி மகிந்துன்—

பரந்து விரிந்து கடலால் சூழப்பட்ட உலகில் பல்வேறு மொழிகளைப் பேசுகின்ற மக்கள் வாழ்கின்றனர். பண்டைய காலத்தில் மக்களால் பேசப்பட்ட சில மொழிகள் இன்று வழக்கில் இல்லை சில மொழிகளோ பழங்காலம் முதல் தற்காலம் வரை பேசப்பட்டும் எழுதப்பட்டும் வருகின்றன. அவற்றைத் தொண்மையான மொழிகளுள் ஒன்றான போன்றாப் புகழுடன் விளங்குவது தமிழ் மொழி. அதுவே எனது தாய் மொழி.



பாரதியார்

'தமிழுக்கு அமுதென்று பேர், அந்த
தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்'



பாரதிதாசன்

என்று தமிழின் சிறப்பைப் பாரதிதாசன் பாடியுள்ளார். தமிழ் மொழி மீது தமிழர்களுக்குஅளவற்ற பற்றுண்டு. தமிழ் மொழி இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழைக் கொண்டுள்ளது. இயற்றமிழ், உரைநடை ஆகியவற்றால் அமைந்த நூ ல்களைக் குறிக்கின்றது. இவை எண்ணத்தை வெளியிட உதவும். இசைத்தமிழ் இசைப் பாடல்களைக் குறிக்கும். நாடகத்தமிழ் பேச்சாலும், நடிப்பாலும் கருத்துக்களை வெளிப்படுத்தும்.

இத்தகைய சிறப்புக்களமைந்த தமிழ் மொழி முதல், இடை, கடை ஆகிய முச்சங்கங்ளால் வளர்த்தெடுக்கப்பட்டது. பல்லாயிரக்கணக்கான இலக்கியங்கள் காலத்துக்கு காலம் தோன்றி தமிழின் சிறப்பைப் பறைசாற்றி நிற்கின்றன. இவ் இலக்கியங்கள் உயர்ந்த கருத்துக்களை கூறி மக்களை நல்வழிப்படுத்தின. பல்வேறு நாடுகளில் தமிழ் மொழி பலராலும் விரும்பிப் பேசப்படுகின்றது. தமிழ் என்னும் பெயரே இனிமை என்னும் பொருளில் அமைந்துள்ளது.

"யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதான மொழி இல்லை" என்றார் பாரதியார். தம் மொழியை வளர்ப்பது போற்றுவது எம் முக்கியமான கடமையாகும். இனிமைத் தமிழ் மொழி நமதாக இருப்பது பெருமையன்றோ!
வாழ்க தமிழ் மொழி!

# என்ன தவம் செய்தோமடி..



–ஆவூரான்–


என்ன  தவம் செய்தோமடி ~ அன்னைத்
தமிழ் மொழியின் பிள்ளை
என்ற  அழைக்க ~நாம்
என்ன தவம் செய்தோமடி
மொழி எங்கள் தாயென்று
சொல்லும் மொழி தமிழ் தானடி~அதை
உயிர் என்று உயர்வாக
உணர்வோடு போற்றுவதும்
தமிழ் தானடி
தமிழ் எங்கள் மூச்சு
தமிழ் எங்கள் பேச்சு
தமிழ் எங்கள் மானம்
தமிழ் எங்கள் அடையாளம்
என்ன தவம் செய்தோமடி~அன்னைத்
தமிழ் மொழியின் பிள்ளை
என்ற அழைக்க~நாம்
என்ன தவம் செய்தோமடி

# நன்றி உள்ள நாய்

–சமுத்திரா பத்மசிறி–

ஒரு மனிதன் ஒரு நாயை வளர்த்து வந்தார். அந்த நாயும் அவரில் அன்பாக இருந்தது. ஒரு நாள் அவர்கள் இருவரும் வெளியில் நடக்கப் போனார்கள்.

வழியில் ஒரு குளத்தைக் கண்டார்கள். அன்று சூடான நாள் என்ற படியால் எஜமான் குளத்தில் இறங்கி குளிக்க ஆசைப்பட்டார்.



அவர் குளத்தில் இறங்க ஆயத்தப்படுத்திய போது, அவரின் நாய் அவரை சுற்றி சுற்றி ஓடி வந்து விடாது குரைத்தது. அவருக்கு ஏன் தன் நாய் இப்படி செய்கிறது என்று தெரியவில்லை.

அவர் தண்ணீரில் காலை வைக்கும் முன் நாய் குளத்தினுள் பாய்ந்தது. நீரிலிருந்து ஒரு முதலை நாயை பிடித்து இழுத்துக் கொண்டு நீரில் மறைந்தது. அப்போது தான் அந்த எஜமானுக்கு தன் நாய் தன்னை காப்பற்றத்தான் குரைத்தது என்று விளங்கியது. தன் நன்றியுள்ள நாயை நினைத்து அழுதார்.

# தமிழ்க்கலை



–விபூசனா தீபன்–

# மது

—ஆரபி மதியழகன்—

வானொலியில் போகின்ற இசையில் என்னை மறந்த நிலையில் வாகனத்தை செலுத்தி, சிகப்பு ஒளியில் நிறுத்தினேன். என் பக்கத்து வீதியில் வந்த வாகனமொன்று நிறுத்தாமல் வேகமாக என்னைத் தாண்டி ஓடியது.

என் இதயம் படபடவென வேகமாக அடிக்கத் தொடங்கியது. ஏதோ நடக்கப்போகிறது என்று மனம் பதைபதைத்தது. எதிர்த்திசையில் ஒரு பெண் இரு குழந்தைகளோடு வாகனத்தில் வந்து கொண்டிருந்தாள். வேகமாக வந்த வாகனத்தை பார்த்ததும் தன் வண்டியை நிறுத்திப் பார்த்தாள். ஆனால் காலம் கடந்துவிட்டது.

பெரிய சத்தம். இரு வாகனங்களும் சந்தியில் சுத்தி என் வாகனத்திற்கு முன்னால் வந்து நின்றது. எங்கும் புகை காணப்பட்டது. என் இதயம் ஒரு கணம் நின்றது. உலகம் சுற்றாமல் நின்றது போல் உணர்ந்தேன். வாகனத்தால் இறங்கியதும் என் முன்னால் இருந்த விபத்தின் விளைவைப்பார்த்து முழுமையான பேரச்சத்தோடு இருந்தேன்.



திடீரென்று நித்திரையிலிருந்து கண் விழித்தேன். என் உடை உடல் வியர்வையால் நனைந்திருந்தது. மூச்சு வேகமாக வந்தது. இருள் சூழ்ந்த என் அறையை சுற்றிப் பார்த்தேன். ஐந்து வருடங்களாக ஒரே கனவுதான் நான் கண் மூடி முழிக்குக்ம் பொழுதெல்லாம். எத்தனை உளவியலாளர்களை பார்த்தாலும், அன்று நடந்த சம்பவத்தை மறக்கமுடியவில்லை. இரத்தம் நிறைந்த வாகனம். கணத்தில் உயிர் துறந்த தாய், பயத்தில் அழுகின்ற குழந்தைகள், காவல்துறை ஊழியர்கள், மருத்துவர்கள். மறக்கமுடியாத இந்த நினைவுகள். இதன் விளைவாக மன அழுத்தம். தாயை இழந்த குழந்தைகளின் நினைவு. அவர்கள் எதிர்காலத்தைப் பற்றிய என் கவலையும், சிவப்பு ஒளியில் நிற்காதவன் மீது என் கோபமும் இன்னும் மறையவில்லை.

ஒரு குடிகாரன் செய்த தப்பு, எத்தனை பேரை எத்தனை விதமாய் பாதித்தது. இதை அவன் அறிவானா?

# கடற்கரையோரம்....

—பிரியங்கா சுங்காசுதன்—

காற்று வீசியது,
ஆகாயம் ஜொலித்தது.
சூரியன் என்னை பார்த்து சிரிக்கும் பொழுது,
அலை பாய்ந்தது.

நீல நிறத்து கடல்த்தண்ணீர்,
எனது முகத்தை நனைத்தது.
மஞ்சள் நிறத்து கடல் மண்,
என் கண்ணுக்குள் புகுந்தது.



மாலை நேரம் பிறகு,
சூரியன் கீழே வந்தது.
வட அரை கோளம் போல்
தண்ணீரிற்குப் பின்னாடி அமர்ந்தது.

நீல நிறத்து வானம்
ஊதா நிறத்திற்கு மாறியது.
பச்சை நிறத்து மரங்கள்
கறுப்பு நிறத்துடன் சேர்ந்தது.

வானத்தில் நட்சத்திரங்கள் தோன்றியபின்
நான் எனது வீட்டிற்குச் சென்றேன்
மீண்டும் நான் திரும்பி வருவேன்
என்ற நம்பிக்கையுடன் போனேன்.

# நேபாளத்தின் பூமி அதிர்ச்சி

—நித்தியா பத்மசிறி—

பூமி பூதாகரமாக அதிர்ந்தது
பிளந்தது பாகங்களாக நிலம்
பிள்ளைகள் வீரிட்டு கத்தினர்
பெற்றோர்கள் செய்வதறியாது தவித்தனர்



வீடுகள் இடிந்து விழுந்தன
வானம் கூரையானது
வேண்டினர் கூக்குரலிட்டு
வேண்டாம் இச்சோதனை என்று

கண்மூடி முளிக்குமுன்னே
காணமல் போனது நகரம் ஒன்று
நேபாளத்தை மறந்து விடாதீர்
நேயம் உள்ள மனிதர்களே !

# பழந்துணியின் சுயசரிதை

–விசாகன் பசுபதிநாசன்–

நான் என் அம்மாவின் அறைக்கு சென்றேன். அங்கு நான் ஒரு உடுப்பு போடுவதற்காக தேடினேன். அப்பொழுது எனக்கு அலுமாரியிலிருந்து ஒரு சத்தம் கேட்டது. நான் பயத்துடன் மெதுவாக அலுமாரியை திறந்தேன். அங்கு அலுமாரிக்குள் ஒரு பழந்துணி கிடந்தது. நான் அதை எடுத்துப் பார்த்தேன். அது ஒரு பழைய புடவை என்று தெரிந்தது. நான் அதை திருப்பி அலுமாரியில் வைக்கும் பொழுது பேசத் தொடங்கியது. நான் அப்பொழுது அதை யார் என்று கேட்டேன். அது நான் என் கதையை கூறுகின்றேன் என்றது.



நான் இந்தியாவில் காஞ்சிபுரம் என்னும் கிராமத்தில் நெய்யப்பட்டேன். என்னையும் என்னுடன் நெய்யப்பட்ட 500 நண்பர்களையும் காஞ்சிப்பட்டு என்று அழைப்பார்கள். பின்னர் எங்களை சென்னை மாநகரத்தில் உள்ள போதிஸ் என்னும் கடைக்கு அனுப்பப்பட்டோம். அங்கு நான் அதிக நாட்கள் இருக்கவில்லை. அங்கு ஒரு வியாபாரி வந்து எங்களில் 100 பேர்களை வேண்டிக் கொண்டு விமானம் மூலம் இலங்கைக்கு கொண்டு போனார். எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. பின்னர் நாம் கொழும்பில் உள்ள ரஞ்ஜனாஸ் என்னும் கடைக்கு அனுப்பப்பட்டோம். கொஞ்ச நாட்களின் பின்னர் வேறு ஒரு வியாபாரி வந்து எங்களை வாங்கி கொண்டு யாழ்ப்பாணம் சென்றார்.

அவர் மோட்டார் வண்டியில் எங்களை ஏற்றி யாழ்ப்பாணத்துக்கு கொண்டு சென்றார். போகும்போது எங்களுடன் வேறு பொதிகளும் கூடவே ஏற்றப்பட்டதால் மிகவும் நசுங்கியபடியும், சில பொதிகளில் இருந்து துர்நாற்றாமும் வீசியது. இவை எல்லாவற்றையும் பொறுத்துக்கொண்டு யாழ்ப்பாணம் போய் சேர்ந்தேன். பின்னர் எங்களை சீமாட்டி என்னும் கடையில் அடுக்கினர்.

சில நாட்களின் பின்னர் இரண்டு பெண்மணிகள் வந்து என்னை வேண்டினார்கள். நான் ஒரு கல்யாண வீட்டுக்கு அணியப்பட்டேன். அதுவும் மணமகள் தான் அணிந்திருந்தாள். அவள் பின் மணவறைக்கு சென்றாள். எனக்கு மகிழ்ச்சியாக இருந்தது. எல்லோரும் என்னை பார்த்தனர். எனக்கு மிகப் பெருமையாக இருந்தது. நாட்கள் போக போக அவளும் என்னை வேறு வேறு இடங்களுக்கு கட்டி கொண்டு போனாள். பின்னர் நான் விமானம் மூலம் அவுஸ்திரேலியா வந்தேன். அப்போதும் எனக்கு சந்தோசமாக இருந்தது. பின்னர் இவ்விடம் வந்ததும் இந்த நாட்டு காலநிலை காரணமாக தான் ஒரு அலுமாரிக்குள் முடங்கிப் போனேன். அது மட்டுமில்லாமல் வேறு தேவைகளுக்காக கிழிக்கப்பட்டேன். நான் இறந்து விடுவேன் என்று அஞ்சுகின்றேன். இது தான் எனது கதி.




ஹரிணி திவாகர்
5 வயது

# ஆடி அழைக்கின்றது

–திருமதி இராணி தங்கராசா–

தமிழ் மாதங்களில் மிகச் சிறப்பான மாதங்கள் தை மாதமும் ஆடி மாதமுமாகும். சூரியன் வடபுறம் சாய்ந்து சஞ்சரிக்கும் காலத்தை உத்தராயனம் என்றும், வடக்கிலிருந்து தென்புறம் சாய்ந்து சஞ்சரிக்கும் காலத்தை தட்சாயனம் எனவும் கூறுவர். தை முதல் ஆனி வரை உத்தராயனம். இக் காலத்தில் பகற்பொழுது அதிக நேரமாக இருக்கும். ஆடி முதல் மார்கழி வரை தட்சாயனம். இக்காலத்தில் இரவு நேரம் அதிகமாக இருக்கும். ஆடித்திங்கள் பல நற்காரியங்களிற்கு சிறப்பான மாதமாகிறது.

*ஆடித்திங்கள் அகவையில் ஆங்கோர்*
*பாடி விழாக்கோள் பன்முறை எடுப்ப*
*மழை வீற்றிருந்து வளம் பல பெருகிப்*
*பிழையா விளையுள் நாடாயிற்று*
–சிலப்பதிகாரம் –

இலங்கை அரசன் கஜபாகு மன்னன் கண்ணகிக்கு கோயில் எடுத்து ஆண்டு தோறும் ஆடி மாதத்தில் சுற்றத்தாருடன் சென்று பல விழாக்களை நடத்தியதால் மழை குறைவின்றி பொழிய, பயிர்கள் செழித்து வளர்ந்து நாட்டில் செல்வம் கொழித்ததாம். மக்கள் சந்தோஷமாக வாழ்ந்தனராம்.

“ஆடிப்பட்டம் தேடி விதை” எனும் முதுமொழியும் இதற்கு சான்றாகின்றது. ஆடி மாதம் அம்பிகைக்கும், அவள் கூறாகச் சொல்லப்படுகின்ற சக்தியர்க்கும் மறுமனைத் தெய்வங்கட்கும் ஏற்புடைய மாதமாகக் கருதப்படுகிறது. சிறப்பான விழாக்கள் ஆடிமாதத்தில் தொடங்குகின்றது. ஆடி மாதத்தில் முதல் இடம் பெறுவது ஆடிப்பூர விழா. மக்களுக்கு அருள் புரிய உலக அன்னையாகிய சக்தி இவ்வுலகில் தோற்றம் அளித்த நாளும், உமை அம்மை பக்குவம் அடைந்த நாளும் ஆடிப்பூரநாளே. இந்நாளில் அம்பாளுக்கு திருவிழாக்கள் சிறப்பாக நடைபெற்று தீர்த்தோற்சவத்துடன் முடிவுறும்.

அஷ்டமா சித்திகளையும் பெறுவதற்கு சித்தர்களும் யோகிகளும் முயற்சிகளைத் தொடங்கும் நாளும் அஷ்டபூர நாளே. ஆதிசங்கரரும் ஆடிப்பூரத்தில் தேவியை அன்புடன் வழிபட்டு நற்பயன் அடைந்தார். திவ்வியப் பிரபந்தம் பாடிய திருமால் அடியார்கள் பன்னிருவரில் ஒரே பெண் சூடிக்கொடுத்த சுடர்கொடியாள் ஆண்டாள் ஆவார். இவர் ஆடி மாதம் பூர நட்சத்திரத்தில் அவதரித்ததாகவும், தேவியே ஆண்டாளாக அவதரித்தாள் என வைஸ்ணவர்கள் நம்புகிறார்கள்.

ஆடி பதினெட்டில் ஆறுகளில் புது வெள்ளம் நிரம்பி வழியும். பண்டைத் தமிழர்கள் வெள்ளப் பெருக்கை மகிழ்ச்சியுடன் கொண்டாடினர். பலவகை உணவுகளை தயாரித்து ஆற்றங் கரையில் அமர்ந்து குடும்பத்தாருடன் வயிறார உண்டு மனமார மகிழ்ந்திருந்தனர். காவேரி ஆறு கரைபுரண்டு வருவதைக் கண்ட பண்டய மக்கள், காவேரித் தாய் மசக்கை கொண்டிருப்பதாகக் கூறி சிற்றுண்டிகள் பலவற்றை தயாரித்து நிவேதனம் செய்து

மகிழ்ந்தனராம். அச் சிற்றுண்டிகளில் கூழும் கொழுக்கட்டையும் நிவேதிக்கப்பட்டதாம். இதுவும் இடம்பெற்றது ஆடித்திங்களிலே.

"கயிலையைக் கண்டால் அன்றி இந்த மாளும் உடல் கொண்டு மீளேன்," மன உறுதியுடன் கல்லையும், முள்ளையும், பசியையும், நோவையும் தாங்கி கயிலையை நோக்கிச் சென்றவர் அப்பர் சுவாமிகள். அவர் அன்பில் உருகிய இறைவன் அப்பர் சுவாமிகளுக்கு திருவையாற்றில் கயிலைக் காட்சியைக் காட்டி அருளிய நாள் ஆடித் திங்கள் அமாவாசையாகும்.

அடியார்க்கும் அடியேன் எனப்பாடி அடியார் பெருமையை அகில உலகமும் அறியச் செய்தவர் சுந்தர மூர்த்தி சுவாமிகள். அவர் ஊன் உடம்புடன் வெள்ளை யானை மீது தன் தோழர் சேரமான் பெருமாளுடன் அமர்ந்து கயிலை சென்றடைந்த மாதமாக ஆடித்திங்கள் பெருமை பெறுகிறது.

ஆடி மாதத்தில் முக்கியமான ஒரு நாள் ஆடி அமாவாசை. இது மூதாதையர் வழிபாட்டைக் குறிக்கும் மிகப் புனித நாள். சூரிய மண்டலத்திற்குத் தென் புறம் பிதிர்களுக்குரிய பிதிர்லோகம் ஆகும். வடக்கில் சென்ற கதிரவன் தெற்கு செல்ல தொடங்கும் காலம் ஆடி மாதம். ஆகவே, ஆடி அமாவாசை மூதாதையர்களுக்கான சிரார்த்தத்திற்கு உரிய மிகச் சிறந்த நாளாகும்.

சூரியனுக்கும் சந்திரனுக்கும் இடையில் உள்ள தூரத்தைக் குறிப்பிடும் ஒரு சொல் "அமா'. அமா என்றால் ஓரிடத்தில் பொருந்தும் என்பது பொருள். ஓர் இராசியில் சூரியன் சந்திரன் இருவரும் சேர்ந்து உறவு காணும் நல்ல நாள் அமாவாசையாயிற்று.
ஆண்மை, ஆற்றல், பராக்கிரமம், வீரதீரம் ஆகியவை சூரியனால் தோன்றுகின்றது. தெளிந்த அறிவு, மகிழ்ச்சி, உற்சாகம், இன்பம் முதலியவை சந்திரனால் பெறுபவை. இதனால் ஆடியமாவாசை நாளும் புனித நாளாகிறது.

ஆடிமாதப் பிறப்பன்று தேங்காய்ப்பால், தேங்காய்பூ சேர்ந்த உணவுகள் சமைத்து விருந்து உண்பது வழக்கம். தேங்காய்ப்பால் சேர்த்து செய்யும் கூழிற்கு ஆடிப்பால் என்றும் பெயருண்டு.

நவாலியூர் திரு சோமசுந்தரப் புலவர் அவர்கள் ஆடிக்கூழ் பற்றி எழுதிய பாடலில் கூழ், கொழுக்கட்டை செய்முறைகளையும் மிக அழகாக சொல்லியிருக்கின்றார்.
புலம் பெயர்ந்து வாழும் நாமும், எங்கள் கலாச்சாரம், பண்பினைப் பேணி ஆடிப்பிறப்பன்று ஆடிக்கூழ், கொழுக்கட்டையுடன் விருந்துண்டு கொண்டாடி மகிழ்வோமாக.

# எனக்கு ஒரு நாய்க் குட்டி இருந்தால்....

–அபிதாரணி சந்திரன்–

எனக்கு ஒரு நாய்க் குட்டி இருந்தால் அதை நான் சரோஜா என்று கூப்பிடுவேன். அதற்கு நல்ல வீடு அப்பாவிடம் சொல்லி செய்து கொடுப்பேன். அதற்கு தினமும் சாப்பாடு கொடுத்து நடக்கக் கூட்டிச் செல்வேன். சரோஜாவுக்கு வருத்தம் என்றால் மிருக வைத்தியரிடம் கொண்டு செல்வேன். நான் சரோஜாவுடன் விளையாடுவேன். அதுவும் முக்கியமாக மற்றவர்களுடன் அவள் எப்படிப் பழக வேண்டும் என்று சொல்லிக் கொடுப்பேன். எனக்கு அந்த சந்தர்ப்பம் கிடைக்கவில்லை என்றால் சரோஜாவை நாய்க் குட்டிப் பள்ளிக்குக் கூட்டிச் செல்வேன்.



அவளை வாரத்திற்கு இரண்டு தடவைகளாவது குளிப்பாட்டி வளர்த்து வருவேன். அத்துடன் குறிப்பாக எமது தமிழ் சாப்பாடுகளைப் பழக்கிவிடுவேன். தமிழில் அதற்கு விளங்கும் படியான இலகுவான வார்த்தைகளுக்கு அது எப்படி எப்படி எல்லாம் செய்ய வேண்டும் என்று சொல்லிக் கொடுப்பேன்.

உதாரணமாக, ஆட்கள் வந்தால் தமிழில் வணக்கம் சொல்லும்போது அது தனது இரு கைகளையும் கூப்பி வணக்கம் சொல்லுதல், இரு என்று தமிழில் சொன்னால் இருத்தல், சாப்பிடக் கூப்பிட்டால் வருதல், வெளியில் போகக் கூப்பிட்டால் சொல்லுக் கேட்டு வருதல், இப்படியான நல்ல பழக்க வழக்கங்களை தமிழில் விளங்கும்படியாக அவளுக்குச் சொல்லிக் கொடுப்பேன்.

எனவே எனக்கு ஒரு நாய் குட்டி இருந்தல் அதனை அன்பாகவும் பண்பாகவும் வளர்ப்பேன்.

# மாலாவும் வானவில்லும்

–பிரதீபா–

ஒரு மழை நாளில், மாலா பொம்மையுடன் விளையாடிக் கொண்டிருந்தாள். ஆனால் அவளுக்கு வெளியே போய் விளையாட ஆசை. அவளின் அம்மா அவளை சாப்பிட கூப்பிட்டார். மாலா காய்கறியை தவிர்த்து மற்ற அனைத்தையும் சாப்பிட்டாள். மாலா ஒரு மாதிரி இருப்பதை அவளின் அம்மா கவனித்தார். அதனால் தான் மாலா சரியாக சாப்பிடவில்லை என நினைத்தார். மாலா அவளது அறைக்குச் சென்றாள். மாலா ஜன்னல் வழியாக வெளியே பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் வானவில்லைப் பார்த்ததும் அம்மாவிடம் கூறிவிட்டு வெளியே சென்றாள். அவள் வானவில்லை நோக்கிச் சென்றாள். சிறிது நேரத்தில் அவள் வானவில் பூமியை தொடும் இடத்தை அடைந்தாள். அங்கே அவள் ஒரு புதையலை கண்டாள். மாலா புதையலை எடுத்துக்கொண்டு வீடு திரும்பினாள். மாலா புதையலை எல்லோருக்கும் பகிர்ந்து கொடுத்து சந்தோசமாக வாழ்ந்தாள்.

# நான் ஒரு கிளியாக இருந்தால்....


–டக்ஷா குமார்–

இன்று மாலை தோட்டத்தில் நீர் ஊற்றிக் கொண்டிருந்தேன். அப்பொழுது ஒரு அழகிய கிளி எங்கள் தோட்டத்தில் உள்ள மாமரத்தில் அமர்ந்து இருந்தது. அது என்னைப் பார்த்து கீ...கீ... என்று கீச்சிட்டது. நானும் அதே போல் கீ...கீ... என்று கீச்சிட்டு பார்த்தேன். அப்போது கிளியாக இருந்தால், எப்படி இருக்கும் என்று உணர்ந்தேன்.

நான் கிளியாக இருந்தால் வானத்தில் அழகாக பறந்து செல்வேன். உயர்ந்த மலைகள், பச்சை பசேலெனக் காட்சி தரும் வயல்கள், பழத் தோட்டங்கள் அனைத்திலும் நான் சென்று அமர்ந்து ஆனந்தமடைவேன். நாளை என்ன உண்போம், என்ன உடுத்துவோம் என்று கவலை எனக்கு இல்லை! ஏன் கவலைப்படவேண்டும்? எனக்கு தேவையான நேரத்தில் பறந்து சென்று உணவை உண்பேன். உறங்குவதற்கு மாடி வீடோ, குடிசையோ தேவையில்லை. மர உச்சிகளில் உள்ள கூடுகளில் படுத்துறங்குவேன். அதிகாலை வேளையில் எழும்புவேன்.



இதோ! மாலையாகிறது. நான் என் கூட்டுக்குச் செல்லவேண்டும். இப்படி நான் எண்ணிக்கொண்டிருக்கும் போது அம்மாவின் அழைப்பு என் சிந்தனையை தூண்டியது. அதனால் நான் அந்த கிளிக்கு சென்று வருகிறேன் என்று சொல்லிவிட்டு எனது வீட்டிக்கு சென்றேன். அம்மா எனக்கு உணவு தயாரித்து வைத்திருந்தார். அதை நான் சாப்பிட்டேன். பின் அம்மாவுக்கு மாலை நான் தோட்டத்தில் உணர்ந்ததை மகிழ்ச்சியாகச் சொல்லி விட்டு நான் உறங்கச் சென்றேன்.


பூக்கள்

1. பூக்கள் அழகானவை.
2. சிலவை மணம் வீசும்.
3. பூக்களில் பல இனங்கள் உண்டு.
4. பூக்களால் மாலை கட்டலாம். அவற்றை சுவாமிக்குச் சூட்டலாம்.

ம. அங்கயன்
வயது - 5

# உயிரினும்....



–மாதுமை கேணேஸ்வரன்–

உயிரினும் மேலாக பாதுகாக்க வேண்டியன எதுவும் உள்ளனவா? ஆம் என்று சொல்கிறார் தெய்வப் புலவர் திருவள்ளுவர்.

"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப்படும்"

உலகிலே பெறுமதியான பல பொருட்கள் இருக்கின்றன. மாடமாளிகைகள், நவீன வாகனங்கள், பொன் பொருள்கள், ஆடை ஆபரணங்கள் , மனைவி மக்கள், சுற்றத்தார், நண்பர்கள் என ஒவ்வொருவருக்கும் ஒவ்வொன்று முக்கியமாக பாதுகாக்கப் படவேண்டிய விடயம். ஆனால் திருவள்ளுவர் இவற்றைப் பற்றி எதுவும் கூறாமல் , உயிரி-னும் மேலாக ஒழுக்கத்தைப் பாதுகாக்க வேண்டும் என்கிறார்.

ஏனென்றால் மேற்கூறியவற்றை நாம் இழந்தால் மீண்டும் பெற்றுக் கொள்ள முடியும். மாட மாளிகைகளை கட்டலாம், நவீன வாகனங்களை வாங்கலாம். ஆடை ஆபரணங்கள் , பொன் பொருள்களை உழைத்து பெறலாம், இன்னொரு திருமணம் செய்து மனைவி , பிள்ளைகளை பெறலாம், அவர்களுடைய உறவுகளை சுற்றத்தாராக எண்ணலாம், புதிய நண்பர்களை ஏற்றுக் கொள்ளலாம். ஆனால் உயிரை இழந்தால் மீண்டும் பெற முடியாது. அதன் காரண-மாகவே ஒழுக்கத்துக்கு உவமையாக உயிரை உரைக்கிறார்.

ஒழுக்கத்துடன் வாழ்வதால் ஒருவருக்கு உயர்வு கிடைக்கும் என்பதால் , ஒழுக்கத்தை உயிரினைப் பாதுகாப்பது போல் பாதுகாக்க வேண்டும் என்று கூறியிருக்கலாமே ? ஏன் உயிரினும் மேல-ாகப் பாதுகாக்கப் பட வேண்டும் என்று கூறுகிறார்

உயிரினை இழந்து விட்டால், பின் எமது உலகியல் வாழ்வும் முடிந்து விடும். ஆனால் ஒழுக்கத்தை இழந்தால் ,பின் உயிர் வாழ்வதில் ஏதும் அர்த்தம் இல்லை. ஒழுக்கத்தை காப்பாற்றி வாழ்ந்த ஒருவன், உயிரை இழந்த பின்பும் உலகத்தாரின் உள்ளங்களில் வாசிக்கிறான். ஒழுக்கத்தை இழந்து , உயிரைக் காப்பாற்றி வாழ்பவன் நடைப் பிணமாகவே வாழ்கிறான் . "மயிர் நீப்பின் வாழாக் கவரி மா" போல மானமுடை-டய மனிதர் , ஒழுக்கத்தை இழந்த பின் உயிர் வாழ மாட்டார்கள். இதன் காரண-மாகவே உயிரினும் மேலாக ஒழுக்கத்தைப் பாதுகாக்க வேண்டும் என்று பொய்யா மெ-ாழிப் புலவர் புகன்றிருக்கிறார்.

அடுத்தடுத்த நூற்றாண்டுகளில் விஞ்ஞானிகள் இழந்த உயிரைக் கொண்டு வந்தாலும் கொண்டு வரலாம். ஆனால் எத்தனை நூற்றாண்டுகள் சென்றாலும் இழந்த ஒழுக்கத்தை மீண்டும் பெறவே முடியாது. உயிரினும் என்ற சொல்லை ஏன் திருவள்ளுவர் பயன்படுத்தினார் என்று சிந்திக்க ,அவரின் புலமை வியப்பைத் தருகிறது.

உயிரை இழந்து விட்ட ஒருவன் உண்மையான பழியைக் கூட இழந்து விடுகிறான். ஆனால் ஒழுக்கத்தை இழந்த ஒருவன் தான் செய்யாத பழி, பாவங்களைக் கூட தான் செய்யவில்லை என்று சொன்னாலும் உலகம் ஏற்பதில்லை. இதனால் உயிரினும் சிறந்தது ஒழுக்கம் என்றாகிறது.

படி இல்லாமல் மாடி ஏறலாம், கால் இல்லாமல் நடந்து செல்லாம், ஒழுக்கமில்லாமல் உயர்வடையவே முடியாது. நாம் எல்லோரும் அற வழியில் நின்று, நல்லொழுக்கத்துடன் வாழ்ந்து , வாழ்க்கையில் உயர் நிலையை அடைவோம். நிறைந்த பணம், வீரம், ஏட்டுக் கல்வி உடையவர்களை விட, ஒழுக்கம் நிறைந்தவர்களே வாழ்வில் உயர்ச்சி பெற்று, சமுதாயத்திற்கும் சேவை செய்கிறார்கள்.

# ஆடிப்பிறப்பு

–சந்துரு பிரதீபன்–

தமிழர் திருநாட்களில் ஆடிப்பிறப்பும் ஒன்றாகும். தமிழ் தினக்காட்டியின் படி ஆடி மாத முதல் நாளே ஆடிப்பிறப்பாகும்.

மற்றைய மாதங்களை விட இம்மாதப்பிறப்பை கொண்டாடுவதற்கு பல காரணங்கள் உண்டு. இம்மாதத்திலிருந்து தேவர்களுக்கு இராக்காலம் ஆரம்பமாவதாக நம்பப்படுகிறது. அத்தோடு கோடை வெப்பம் தணிந்து குளிர் காலம் தொடங்குகிறது.

இத்தினத்தில் விசேடமாக கூழ், கொழுக்கட்டை என்பவற்றை செய்து உண்டு உறவுகளோடு பரிமாறி மகிழ்வோம். இம்மாதத்தில் ஆடிப்பூரம், ஆடி அமாவாசை, ஆடிச் செவ்வாய், ஆடிப் பெருக்கு என்பனவும் சிறப்பாக கொண்டாடப்படுகிறது.

"ஆடிப் பிறப்பிற்கு நாளை விடுதலை
ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே"

என்று நவாலியூர் சோமசுந்தரப் புலவர் மிக அழகாகப் பாடியுள்ளார்.

# நவராத்திரி

–அபிராமி–

☞நவராத்திரி விழாவை இந்து மக்கள் கொண்டாடுவார்கள்.
☞இந்த விழா பத்து நாட்களுக்கு அனுஸ்டிக்கப்படும்.
நவராத்திரி விழா புரட்டாசி மாதத்தில் வரும்.
☞பாடசாலைகள் மற்றும் தொழிற்சாலைகள் சிறப்பாக நவராத்திரியை கொண்டாடுவார்கள்.
☞துர்க்கா, லட்சுமி, சரஸ்வதி ஆகிய தெய்வங்களை அந்த விழாவில் வணங்குவார்கள்.
☞நவராத்திரி காலத்தில் வீடுகளில் கடலை, அவல், வடை, மோதகம், பொங்கல் போன்ற உணவை வைத்து படைப்பார்கள்.
☞நவராத்திரி காலங்களில் கோவில்களில் இசை மற்றும் நடன நிகழ்ச்சிகள் நடைபெறும்.
☞வீடுகளிலும் ஆலயங்களிலும் நவதானியம் முளைக்கவைத்து, கொலு வைத்து கொண்டாடுவார்கள்.
☞இறுதி நாளான விஜயதசமியில் சிறுவர், சிறுமியருக்கு ஏடு தொடங்கும் நிகழ்ச்சி நடைபெறும்.
☞நவராத்திரி ஒரு சிறப்பான விழாவாகும்.

# மம்மி .... i want தண்ணி......!!!



–தமிழ்பொடியன்–

ஆயிரம் மைல் கடந்து அன்னைதேசம் தனை
பிரிந்து அனாதைகளாய் ஆனபோதும்
அண்ணனாய் தம்பியாய் பிள்ளைகளாய் உற்ற
உறவுகளாய் அன்போடு அரவணைக்கும்
என் புலம் பெயர் சொந்தங்களே வணக்கம்!

என் உயிரிலும் மேலான தமிழ்தாயின்
உச்சிமுகர்ந்து
அவள் தந்த தமிழ்ப்பாலின் பாசம் உணர்ந்து
புதுவை அண்ணாவை என் நெஞ்சில் வைத்து
காசி அண்ணாவின் கைபிடித்து கவிதை
நான் எழுதி வந்தேன் காலம் அறிந்து!

**வீட்டிலே தமிழ்!**
**தமிழா வீட்டிலே தமிழ் பேசு-இல்லையேல்**
**தமிழ்மானம் போச்சு!**

தமிழனாய் பிறந்தோம் என்று பெருமை
பேசு – இல்லையேல்
தமிழினத்தின் அருமை போச்சு!

தமிழினத்தின் உயிர மூச்சுதானே எங்கள்
செம்மொழி
மூச்சையே நிறுத்திவிட்டால் இனம் வாழ
ஏது வழி?

படலை திறந்து வந்தோம்
உடலை மட்டும் தானே கொண்டுவந்தோம்
உயிரும் உணர்வும் இப்போதும்
அங்கேதானே!

சத்தியமாய் சொல்லுங்கள் எங்களின் கால்
இடுக்கில்
இப்போதும் எங்கள் வீட்டின் முற்றத்து
மண்தானே ஒட்டி இருக்கிறது.
அரியாலையில் இருந்தமாதிரி
அவுஸ்திரேலியாவில் இருக்கமுடியாது
மேடைக்கு ஏற்ற வேசம் போட்டே
ஆகவேண்டும்
ஆனாலும் தமிழன் என்ற அடையாளம்
தொலைக்கப்படாது

அடையாளங்களை தொலைத்துவிட்டு
அரைகுறையாய் வாழ்வதை விட
அட அம்மணமாக வாழ்வது எவ்வளோ
மேல்!

ஒசி (Aussie) என்று சொல்வதில்
சிலநேரம் எனக்கு பெருமை!
என்னதான் வெளுக்க ”லோசன்” (lotion)
போட்டாலும் என் தோல் கருமை!
கங்கையில் மூழ்கினாலும் காக்கை
அன்னமாகாது அதுதான் உண்மை!

வீட்டிலே தமிழ்!
தமிழா வீட்டிலே தமிழ் பேசு – இல்லையேல்
தமிழ்மானம் போச்சு!

பிள்ளை ஒன்று பெறுவதே பெரும்பாடு
என் பெற்றபிள்ளை தமிழ் மறந்தால் அது
வெக்கக்கேடு!

**தமிழா வீட்டிலே தமிழ் பேசு-இல்லையேல்**
**தமிழ்மானம் போச்சு!**

பெற்ற பிள்ளைக்கு பீற்றர் என்றும் ஹரிபோட்டர் என்றும்
பெயர் வைச்சால் என்ர பிள்ளை என்ன மொழி பேசும்?

பீற்றரும் ஸ்ரெல்லாவும் "hi how are you " என்று பேசலாம்
தமிழரசியும் கலையரசியும் "hi how are you buddy" என்று சொன்னால்
என்னாகும் எங்கள் சந்ததி?

தமிழரசியின் பெயரில் மட்டுமே தமிழ்
அவள் மூச்சிலும் இல்லை பேச்சிலும் தமிழ் இல்லையே!
அது அவள் பிழை இல்லை! தழிழரசியை பெற்ற தந்தை என் பிழை!

Factory இல் பட்டை அடி அடிச்சுப்போட்டு
பாசத்தோடு ஓடு வந்து முத்தமிட்டால்
"அப்பா" என்று சொன்னால்த்தானெ அந்த அலுப்பு தீரும் அப்பதான் என்ர ஆயுளும் கூடும்

என்ர மூத்தது "Daddy i want Ulunthu VADA" என்கிறான்
அட என்ர கடைக்குட்டி "மம்மி .... i want தண்ணி......" என்கிறாள்

தாலி கட்டியவளை "Darling" என்றால்
என்ர பிள்ளை என்னப்பாத்து "னுயனய" என்டுதான் சொல்லுவான்
காலம் போக என்னை "வாடா" என்பான்
மனம் நொந்து என்ன பலன்?

கட்டிலிலே தமிழ் மறந்தால்....
தொட்டிலிலே என்ன வரும்?

**தமிழா வீட்டிலே தமிழ் பேசு-இல்லையேல் தமிழ்மானம் போச்சு!**

தாய்ப்பாலோடு சேர்த்து தமிழையும் ஊட்டுங்கள்
தாய்பாசத்தோடு சேர்த்து தமிழ்நேசத்தையும் காட்டுங்கள்

நாங்கள் எல்லாம் பூவரசம் கதியால்
புடுங்கி வந்து ஆவுஸ்திரேலியாவில்
நட்டாலும் பூக்கிறது பூவரசம் பூதான்!
ஆனால் இந்த பிஞ்சுகள் பூவரசம் பூவின் நிறம் அறியாத ரோஜாக்கண்டுகள்

விதை விதைக்கும் போது அவதானம்
இல்லையெனில் எங்களுக்குத்தான் அவ–மானம்!

NORWAY இல் இருந்து வந்த மூத்தவளின் இளையதும்
FRANCE இல் இருந்து வந்த இளையவ–ளின் கடைசியும்
என்ன மொழியில் பேசுவது என்று தெரியாமல் முழிக்கும்..!!!

என்ர அப்புவுக்கு ஆயிரம் டொலர் தேவையில்லை
தன்ர பேரன் தமிழ் பேசவேண்டும்
அப்பதான் அப்புவின் அடிவயிறு குளிரும்.

ஆங்கிலம் பேச வேண்டாம் எண்டு குதர்க்கம் பேசவில்லை
ஆங்கிலம் என்பது அவசிய மொழிதான் – ஆனால்
அன்னை மொழியை ஆங்கிலம் திண்டால்
அடுத்த சந்ததி தமிழ் மறந்தால்
யாருக்கு வேதனை?

தமிழ் இனத்தை அழிக்க ஆரும் தேவையில்லை
மொழியை மறந்தால் தமிழ் இனம் தானாய் அழியாதோ?

**தமிழா வீட்டிலே தமிழ் பேசு-இல்லையேல்**
**தமிழ்மானம் போச்சு!**

எத்தனை ஆயிரம் உயிர்விலை கொடுத்து
செங்குருதி ஊற்றி வளர்த்த மொழியல்லோ
எங்கள் தாய்மொழி
தமிழ் இனத்தின் விழிதானே எங்கள்
தமிழ்மொழி

அடிபடுவம் பிடிபடுவம் புடுங்குப்படுவம் –
ஆனால்
தமிழ் ,தமிழன் எண்டால்
தம்பியாய் தங்கையாய் அண்ணனாய் ஒண்டா
நிப்பம்!

தாயை பழித்தவனின் நாக்கைதான்
அறுப்போம்.
தாய் மொழியை பழித்தவனின் தலையையே
அறுப்போம்.

நாளைய இந்த சந்ததி தமிழ் மறந்தால்
நாறிப்போகாதோ நம் இனம்?
இளைய சந்ததிக்கு இது புரிந்தால் இன்னும்
தலைநிமிரும் எம் இனம்.

தாய் பிறந்த தேசத்தின் வாசம் அறியாத
இந்த பிஞ்சுகள் சில
எம் இனத்தின் மேலும், தமிழின் மேலும்
கொண்ட பாசம்
அப்பழுக்கில்லாத ஆழ்ந்த நேசம்.!

வாய்க்கால் வெட்டி வளிந்தோடும் இந்த
நீருக்கு வழிகாட்டுங்கள்
வளர்க்கிற போதே வாய்க்கு வாய் தமிழ்
சொல்லி வளருங்கள்

வெளியில என்ன மொழியையும் பேசுங்கோ
வீட்டில மறக்காமல் தமிழையே பேசுங்கோ..

தமிழ் பேசுபவன் எல்லாம் தமிழன் அல்ல
ஆனால் தமிழன் தமிழ் பேசியே ஆகவேண்டும்.

தலையெழுத்து என்னவாக இருந்தாலும்
எங்கட பெயரின் முதலெழுத்து தமிழில்
இருக்கவேணும்

மம்மி .... i want தண்ணி......!!!
தமிழ்த்தாய் நொந்து போவாளே இதை
எண்ணி

**வீட்டிலே தமிழ்!**
**தமிழா வீட்டிலே தமிழ் பேசு-இல்லையேல்**
**தமிழ்மானம் போச்சு!**

# தாவரங்களின் பயன்கள்

–கவிப்பிரியா அருணகிரிநாதன்–

☞ மிளகாய்ச்செடி எங்களுக்கு மிளகாய் தரும். மிளகாய் சமையலுக்கு உதவும்.

☞ பழ மரங்கள் எங்களுக்கு பழங்கள் தரும். உதாரணமாக வாழை, மா, பலா, அப்பிள் மரங்களின் பழங்களை நாங்கள் சாப்பிடுவோம்.


☞ சில தாவரங்கள் மிருகங்களுக்கு உணவாக பயன்படும்.

☞ தாவரங்கள் வெளிவிடும் உயிர் வாயு மனித சுவாசத்துக்கு உதவும்.

# ஆடிப்பிறப்பு

ஆடிப்பிறப்பு ஆடி மாதத்தில் கொண்டாடுவோம். ஆடிப்பிறப்பிற்கு அம்மாகூழ் சமையல் செய்வார். அப்பம்மா கொழுக்கட்டை சமைப்பார். எனக்கு கூழும் கொழுக்கட்டையும் நன்கு விருப்பம்.

பிருண்ணா மயூரன் தரம் 2.



# நான் !!!

எனது பெயர் டிசாந்த் பொன்ராசா. நான் அவுஸ்ரேலியா பாரதிபள்ளியில் நான்காம் வகுப்பில் எனது தாய் மொழியான தமிழ்மொழியை கற்றுக் கொண்டு இருக்கின்றேன். தமிழ்-மொழி எனது தாய் மொழி இதனை நான் என்றும் மறக்க மாட்டேன்.

இதனோடு நான் அவுஸ்ரேலியா மொழியான ஆங்கிலப்பாடத்தையும் கற்கின்றேன். எனக்கு பிடித்த பாடம் தமிழ் மற்றும் கணக்கு. எனக்கு பிடித்த விளையாட்டுகள் துடுப்பாட்டம், கூடைப்பந்து.

# மனிதாபிமானம்



–சரணியா சத்தியன்–

"ஹேய் தர்ஷினி, நான் இங்க இருக்கேன்" என அவர்கள் அலுவலகத்தின் உணவறையில் தன்னை தேடிக் கொண்டிருந்த தனது தோழி தர்ஷினியை அழைத்தாள் துர்க்கா. அவளைப் பார்த்த தர்ஷினி புன்னகைத்தபடி அவள் அருகில் வந்து அமர்ந்தாள்.

"என்ன தர்ஷி எவ்வளவு நேரம் உனக்காக சாப்பிடாம காத்திருக்கிறது? ஏன் இவ்வளாவு லேட்? எனக் கேட்டாள்.
"அதை ஏன்பா கேட்கிற, நானும் சாப்பிடலாம்னு எழுந்த போது தான் மாலிங்க வந்து அவசரமா ஒரு ரிபோர்ட் வேணும்னு கேட்டார். அதை மெயில் பண்ணிட்டு வர கொஞ்சம் நேரம் ஆயிடிச்சு. அது சரி நீ இன்னிக்கு என்ன சாப்பாடு கொண்டுவந்திருக்க? எல்லாம் உனக்கு பிடிச்ச தக்காளி சாதமும், உருளைக்கிழங்கு வறுவலும் தான். என்றாள் துர்க்கா.

சூப்பர் துர். என் நண்பிடி என்றாள் சந்தானம் பாணியில். இவாறு பேசியவாறே இருவரும் தமது உணவை பங்கிட்டு உண்ண ஆரம்பித்தனர். அப்பொழுது துர்க்கா ஞா-பகம் வந்தவளாக "ஏய் தர்ஷி, இன்னிக்கு நியூஸ் பேப்பர் பார்த்தியா? அதுல நம்ம கம்பனி C.S.Rபற்றியும் C.S.R Head நந்தினி பற்றியும் வந்திருக்கு.

இளமையில் கல்வி இன்றியமையாதது என்பதை நல்லா தெரிஞ்சுகிட்டு, நம்ம கம்பனியோட ஊ.ளு.சு புரொஜெக்டா ஒரு பின்தங்கிய கிராமத்தை தேர்வு செய்து, அங்க இருக்கிற 47 குழந்தைகளுக்கு பள்ளி ஆரம்பித்து, அவங்களை கம்பனியோட செலவிலயே படிக்க வைக்கிறாங்க. உண்மையிலேயே பெரிய விஷயம் இல்லையா? பத்திரிக்கையில கூட இது ஒரு நல்ல முயற்சி என்று பாராட்டி எழுதினதோட மட்டும்மல்லாமல், இந்த வருசத்தோட சிறந்த C.S.R விருது நம்ம கம்பனிக்கு கிடைக்ககூடிய வாய்ப்புக்கள் உள்ளது என்று எழுதியிருக்காங்க. அதுல நந்தினியோட பேட்டி கூட போட்டிருந்தாங்க. அதுல அவங்களோட ஒவ்வொரு பதிலும் என்னை சிலிர்க்க வைச்சிடுச்சு.

ஒரு பின்தங்கிய கிராமத்தில வறுமையில இருக்கிறவங்களுக்கு பண உதவி செய்வதை விட கல்வியை வழங்குவதன் மூலம் அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதே சிறந்தது மற்றும் நிலையானது என்று சொல்லியிருந்தாங்க. நந்தினி ரியலி கிரேட். "என்ன தர்ஷி நான் இவ்வளவு சொல்லிட்டு இருக்கேன் நீ அமைதியாவே இருக்க"

"இதுல நான் சொல்லுரத்துக்கு என்ன இருக்கு" என்றாள் தர்ஷினி.
"நீ ஒரு மாதிரி சலிப்பா சொல்லுர மாதிரி இருக்கு தர்ஷி. என்னடி ஆச்சு?"
"நந்தினியோட உண்மையான குணம் தெரிஞ்ச எனக்கு இதை கேட்கும் போது சலிப்பாத்தான் இருக்கு."
"என்ன தர்ஷி, புரியிரமாதிரி தான் சொல்லேன்."

உனக்கு தான் தெரியுமே நந்தினி என்னோட பக்கத்து வீடுனு. எங்க வீட்டு மாடில நின்னா, அவங்க வீட்டு பின் பக்கத்தில நின்னு கதைக்கிறதெல்லாம் கேட்கும். அப்படித்தான் போன ஞாயிற்றுக்கிழமை சாயங்காலம் நான் மாடில இருந்து படிச்சிட்டிருந்தேன். அப்போ நந்தினி அவங்க வீட்டுல வேலை செய்யிர அம்மாவோட பின்பக்கம் நின்னு கத்திட்டிருந்த்தது கேட்டது. அந்த அம்மா அவங்க பொண்ணுக்கு காய்ச்சல் என்பதால அவங்க பேத்திய வேலைக்கு கூட்டிக்கொண்டு வந்திருந்தாங்க. அதுக்கு நந்தினி அந்த அம்மாவ போட்டு வறுத்து எடுத்திட்டாங்க.

“ஏன்ன சொல்லுர தர்ஷி”

தர்ஷினியும் அன்று நடந்ததை அப்படியே கூற ஆரம்பித்தாள். அன்று படித்துக் கொண்டிருந்த தர்ஷினியின் காதில் நந்தினி கத்தும் சத்தம் கேட்டது. “தெய்வானை இது உன் பேத்தியா?” என ஒரு பத்து வயது கூட வராத ஒரு சிறு பெண் குழந்தயை அவரை நோக்கி தள்ளி விட்ட படியே கத்தினாள். “எதுக்காக அவளையெல்லாம் இங்க கூட்டிகிட்டு வர? உனக்கு அறிவே இல்லையா? இந்த சன-ியன் வீட்டுக்குள்ள வந்து நான் ஆசை-சயா வாங்கி வச்ச பூச்சாடியை விழுத்தி உடைச்சிட்டா. அதோட விலை தெரியுமா உனக்கு. 8000 ரூபா. உன்னோட ஒரு மாச சம்பளமும் வராது. உன் சம்பளத்தில தான் அதை பிடிக்கவேணும்” இதனைக் கேட்டு பதறிய தெய்வானை “ஐயோ அம்மா. அவ தெரியாம செய்திருப்பா. அதுக்காக நான் மன்னிப்பு கேட்டுகிறேன். என் பொண்ணுக்கு இன்னிக்கு காய்ச்சல் அதான் இவள என் கூட கூட்டிடுவர வேண்டியதா போச்சுமா. நான் ஐயாகிட்ட கூட சொல்லிட்டேன்மா. ஐயா தன் கூட்டி கொண்டு வர சொன்னாரு. ஏதோ இங்க தம்பியோட பழைய புத்தகங்களும், பையும் இருக்குதாம். என் பேத்திய கூட்டி கொண்டு வந்தால் அதை எல்லாம் பார்த்து எடுத்துட்டு போகலாம்னு சொன்னார்” என்றாள்.

இதனைக் கேட்டு கோபமாகிய நந்தினி அவள் கணவனை அழைத்தாள். அங்கு வந்த அவளது கணவனிடம், நீங்க தான் இவ பேத்தியை கூட்டிக் கொண்டு வர சொன்னிங்களா? உங்களுக்கு கொஞ்சமாவது அறிவு இருக்கா? இன்னிக்கு நம்ம வீட்டுக்கு முக்கியமான விருந்தாளிங்க வராங்க. அவங்க வரும் போது இவ இங்க இருந்தா நல்லாவா இருக்கும். அவளோட உடுப்பும், தலை முடியும் என அச் சிறு பெண்ணின் கிழிந்த ஆடையையும், கலைந்த தலைமுடியையும் பார்த்து அருவருத்தவாறே கூறினாள்.

அதற்கு அவள் கணவனோ, “ஏன்மா, அவ பின் பக்கம் தெய்வானையோட தானே இருக்கப்போறா. அதுனால என்ன வந்துது இப்போ” எனக் கேட்டார். “அப்படி இருந்திட்டாலும். அவ பாட்டுக்கு உள்ள வந்து நான் போன வாரம் வாங்கி வச்ச பூச்சாடிய போட்டு உடைச்சிட்டா. இது மாதிரி அவங்க வந்திருக்கும் போது செய்த எவ்வளவு அசிங்கம் தெரியுமா?” அது சரி நீங்க தெய்வானைகிட்ட நம்ம பையனோட புத்தகம் பை எல்லாம் குடுக்கிறதா சொன்னிங்களா? யாரைக் கேட்டு அப்படி சொன்னிங்க.

“எங்க கம்பனியால ஒரு பிந்தங்கிய கிராமத்தை தத்தெடுத்து அங்க இருக்கிற 47 பிள்ளைகளுக்கு இலவசமா படிப்பிக்கபோறோம். அதுக்கு அடுத்த வாரம் என்னோட டீம் அந்த ஊருக்கு போறோம். அப்படி போகும் போது.

எங்க கம்பனில வேலை செய்ரவங்ககிட்ட இருந்து நாங்க சேர்த்த புத்தகம், பை என்று எல்லாம் கொண்டுபோறோம் அந்த பிள்ளைகளுக்காக. எங்க வீட்ட இருக்கிறதையெல்லாம் இந்த தெய்வானைக்கு கொடுத்து விட்டுட்டா அப்புறம் நான் என்னத்தை அடுத்த வாரம் கொண்டுபோரது. நான் தொடங்கின ப்ரோஜெக்டுக்கு நானே கண்ட்ரிபுயூட் பன்னலைனா என்ன பற்றி என்ன நினைப்பாங்க?" என கத்தினாள்.

ரமேஷோ "எனக்கு எப்படி நந்தினி அதெல்லாம் தெரியும். நீ அதெல்லாம் பழசுனு எடுத்து வைச்சா, தெய்வானை கேட்டப்போ எடுத்துட்டு போக சொன்னேன். உனக்கு அது தேவை என்றால் தெய்வானைட சொல்ல வேண்டியது தானே. அதுக்கு ஏன் என்னை தொந்தரவு பண்ணுர? ஒரு முக்கியமான கால் வரும். எனக்கு தலைக்கு மேல வேலை இருக்கு. தயவுசெய்து என்னை எதுக்கும் கூப்பிடாத" என கூறியவாறே அங்கிருந்து அகன்றார்.

தெய்வனையைப் பார்த்த நந்தினி "உன் பேத்தி வீட்டுக்குள்ள செய்திருக்கிற அலங்கோலத்தை எல்லாம் பத்தே நிமிஷத்தில் சுத்தப்படுத்திடு. இன்னிக்கு ஒரு நாள் உன் பேத்தி இங்க இருக்க சம்மதிகிறேன். ஏன்னா நீ போய் இவளை விட்டு வர்றதுக்கு நேரமாகிடும். ஐயா சொன்னார், ஆட்டுக்குட்டி சொன்னார்னு புத்தகம் எல்லாம் என்கிட்ட கேட்காதே. அது எல்லாம் தரமுடியாது. அடுதாட இனிமே பேரன் பேத்தினு ஒருத்தரையும் இங்க கூட்டிவரக்கூடாது. புரிஞ்சுதா?" என முறைத்தவாறே கூறினாள்.

இதனைக் கேட்ட தெய்வானையும் "சரிம்மா" என்று அழுத படியே கூறினார்.

நந்தினி உள்ளே சென்றதும் தெய்வனை தனது பேத்தியை அணைத்து, நீ ஏன்மா அதை உடைச்சா? என்று கேட்டார். அதற்கு அவள் "இல்லை பாட்டி. இவ்வளவு பெரிய வீட்டை நான் பார்த்ததே இல்லை அதான் பார்க்கலாம்னு போனேன். அப்போ அது கை தவறி விழுந்திடுச்சு. என்னை மன்னைச்சிடுங்க பாட்டி. இனிமே இப்படி செய்யமாட்டேன்" என கூறி அழுதாள்.

பரவால்லமா. அதை விடுடா செல்லம் எனக் கூறினார் தெய்வானை. ஆனால் அந்த சின்னஞ்சிறு பெண்ணோ "அவங்க அடிச்சது காது கன்னம் எல்லாம் ரொம்ப வலிக்குது பாட்டி" என்று கூறி தேம்பி தேம்பி அழுதாள். இதனைக் கேட்டு அவா துடிச்ச துடிப்பு இருக்கே என்னால இன்னும் மறக்கமுடியல. அந்த பொண்ணு அழுதுகிட்டு வலிக்குது பாட்டினு சொன்னது என்னாலைய தாங்கமுடியல அவங்களுக்கு எப்படி இருந்திருக்கும். என்ன செய்ய முடியும். அவங்களுக்கு வேலை முக்கியமாச்சே. அதனால எப்படியோ அவளை சமாதான படுத்திட்டு வேலைய பார்க்க ஆரம்பிச்சிட்டார்.

"நீ சொன்னியே மனிதாபிமானம், அது கண்ணுக்கு முன்னால இருக்கிற பொண்ணுகிட்ட ஏற்படல நந்தினிக்கு, ஆனா எங்கேயோ இருக்கிற பிள்ளைகள் மேல ஏற்பட்டிருக்கு. இதுக்கு பெயர் சுயநலம். இந்த ப்ரோஜெக்ட் வெற்றியடைஞ்சா அவங்களுக்கு போனஸ் மூலமா நிறைய பணம் கிடைக்கும். தெய்வானையோட பேத்திக்கு இரக்கப் படுவதாலோ, உதவி செய்வதாலோ அவங்களுக்கு எதுவும் கிடைக்கப் போவதில்லையே" என கூறினாள் தர்ஷி.

இதனைக் கேட்ட துர்க்காவால் “நந்தினியா இப்படி என நம்பவே முடியவில்லை, எப்படி தர்ஷி இவங்களால இப்படி இருக்க முடியுது. என்னால நம்பவெ முடியல. இப்ப அவங்கள நினைச்சா அசிங்கமா இருக்கு” என கூறினாள் துர்க்கா.

இதனைக் கேட்டு சிரித்த தர்ஷினி கூறினாள் “அவங்கள பற்றி பேச நமக்கு எந்த தகுதியும் இல்ல துர். நாங்களும் அப்படித்தான் இருக்கோம். நம்ம கண்ணு முன்னாடி நடக்கிற விஷயங்களுக்கே நாம ஊமையா தானே இருக்கோம். அன்னிக்கு நந்தினி வீட்ட நடந்தத நினச்சு அந்த பொண்ணுக்காக வருத்தப்பட்டேனே தவிர அவளோட துயர் துடைக்க நான் எதுவுமே செய்யலயே. ஏன் அன்னிக்கு பம்பலபிட்டியில் ஒரு சின்ன பையன் கடை வாசலில வந்து நின்னு பிச்சை கேட்டதுக்கு, அந்த முதலாளி அவனை கேவலமா திட்டி அடிச்சு விரட்டினாரு. அப்ப கூட அவனுக்காக நாம ரெண்டு பேரும் பாவப்பட்டோமெ தவிர வேற என்ன செய்தோம். அமைதியா தானே இருந்தோம். ஏன்னா நாமலும் இந்த சோ கோல்ட் சிவிலைஸ்ட் சொசைட்டியில ஒரு பங்குதாரர் தான்”.

தூய்மையான மனதோட சேவை செய்த்து எல்லாம் அன்னை தெரேசாவோட முடிஞ்சுபோச்சு. இப்பவெல்லாம் உள் நோக்கம் இல்லாம உதவியே இல்லை. பக்கத்து வீட்டு காரனுக்கு ஒன்னுனா வந்து நிக்கிறது அந்த காலம். இப்ப பக்கத்து வீட்ட யார் இருக்காங்க எங்கிறதே நமக்கு தேவையில்லாத விடயம் தான். இயந்திரமயமாக்கப்பட்டது உலகம் மட்டுமல்ல மனிதனும் தான். மனிதன் மனித தன்மையை இழந்து அடிப்படை மனிதாபிமானம் கூட இல்லாம அழிஞ்சுகிட்டே வருகிறது.

இதனைக் கேட்ட துர்க்காவிற்கும் சிவிலைஸ்ட் சொசைட்டி என்கிற பெயரில் மனிதன் மற்றவர்களை மறந்து சுயனலத்துடன் தனக்காக மட்டுமே வாழ்வதாகத் தோன்றியது.

# கடற்கரை

—வைஸ்ணவி சிரீதரன்—

☞ எங்கள் வீட்டிற்கு பக்கத்தில் கடற்கரை அமைந்துள்ளது.
☞ வெயில் காலங்களில் நாங்கள் கடற்கரைக்கு செல்வோம்.
☞ சில மக்கள் கடல் தண்ணீரில் நீந்துவார்கள்.
☞ சிறுவர் சிறுமியர் மணலில் வீடு கட்டி விளையாடுவார்கள்.
☞ மணலில் சிப்பி, சோகி, ஊரி, சங்கு போன்றவற்றை காணலாம்.
☞ மீனவர்கள் மீன் பிடிக்க கடலுக்கு செல்வார்.
☞ கடலில் அலைகள் வந்துகொண்டிருக்கும்.
☞ மாலை நேரத்தில் கடற்கரையில் சூரியன் மறையும் காட்சி அழகாக இருக்கும்.

# நான் கலந்துகொண்ட திருமண விழா

–ஹரிஹரன் பசுபதிதாசன்–

நான் எனது மாமாவின் திருமணத்தில் கடந்த தை மாதம் கலந்து கொண்ட கதை இது. நான் மற்றும் எனது குடும்பத்தினர் சேர்ந்து திருமண மண்டபத்திற்கு சென்றோம். திருமண மண்டபம் சேர்ந்தவுடன் நாங்கள் மணமக்களின் அறைகளுக்கு சென்றோம். என் குடும்பத்தில் இருக்கும் பெண்கள் என் மாமியை (மணமகளை) அவசரமாக அலங்கரித்தார்கள். நான் மற்றும் என் குடும்பத்தில் இருக்கும் ஆண்கள் என் மாமாவை (மணமகனை) அவசரமாக அலங்கரித்தோம்.

நான் மற்றும் எனது குடும்பத்தினர் திருமண மண்டபத்திற்கு தாமதமாக வந்தபடியால் மணமக்கள் திருமண மண்டபத்திற்கு வருவதை கூட பார்க்க முடியவில்லை. மணமக்கள் அலங்கரிக்கப்பட்டு மணமகன் முதலாவதாக மணவறைக்குச் சென்றார். பின்னர் மணமகளும் மணவறைக்குச் சென்றார். ஐயர் மந்திரங்களை சொல்லத் தொடங்கினார். நான் மற்றும் எனது குடும்பத்தினர் முதல் வரிசையில் அமர்ந்தோம்.

சிறிது நேரத்தின் பின்னர் தாலியை தாம்பாளத்தில் வைத்து மண்டபத்தில் இருக்கும் பெரியவர்களின் ஆசிர்வாதத்தை வாங்குவதற்காக எல்லோரிடமும் காட்டினார்கள். பின்னர் ஐயர் தாலி மந்திரம் சொல்ல, நாதஸ்வரம் மற்றும் கெட்டி மேளம் முழங்க மணமகன் மணமகளின் கழுத்தில் தாலி கட்டினார். அதே நேரம் மண்டபத்தில் முன் வரிசையில் அமர்ந்துள்ள எல்லோரும் அரிசி எறிந்தார்கள். பின்னர் எல்லோரும் மணமக்களை ஆசிர்வதித்தார்கள்.

திருமணத்திற்குப் பின்னர், வந்து இருப்பவர்களுக்கு விருந்துபசாரம் நடைபெற்றது. அத்துடன் திருமணம் இனிது நிறைவு பெற்றது. பின்னர் மாமா மற்றும் மாமி கணவன் மனைவியாக சந்தோசமாக வாழ்ந்தார்கள்.

**மூத்த பிரஜைகளின் நலன் பேணுமுகமாக, கேசி தமிழ் மன்றத்தினால் நடாத்தப்படுகின்ற மூத்த பிரஜைகள் ஒன்றுகூடல், ஒவ்வொரு மாதத்தின் கடைசி சனிக்கிழமை முற்பகல் 10:00 தொடக்கம் மதியம் 2:00 மணிவரை, 112** High Street, Berwick, VIC **3806 எனும் முகவரியில் அமைந்துள்ள** "Berwick Senior Citizens Hall" **இல் நடைபெறுகின்றது. மேலதிக விபரங்கள் கேசி தமிழ் மன்ற இணையத்தளத்தில்** www.caseytamilmanram.org.au **பார்வையிடலாம்.**

# நாய்

நாய் மிருதுவான மிருகம். நாய் நன்றி உள்ள மிருகம். இந்து முனைபூட்டி வகையை சேர்ந்தது

நாய்களின் காதுகள் மிகவும் கூர்மையானவை. நாய்களுக்கு மோப்பசக்தி அதிகம உண்டு.

உலகத்திலே இருபத்தும் அதிகமான நாய் வகைகள் இருக்கின்றன.

நாய்யை நாங்கள வளர்க்கும் போது, நாய்கு கட்டாயமாக ஒரு கழுட்டுப் பட்டி (color), மைக்ரோசிப் (microchip), சயம் (lead) என்பவற்றை அணிவித்தல் வேண்டும். இவை நாயை பாதுகாப்பாக வைத்திருக்க உதவும்

நாய்கள் மிகவும் சுறுசுறுப்பாக இருக்கும். நாய்கள் வீட்டைக் காக்கும். நாய் மனிதனின் நல்ல நண்பன்



# தமிழரின் விழாக்கள்

—வைஷ்சுர்ணி சாய்ாசன்—

தமிழ் பண்பாட்டில் நிறைய விழாக்கள் உள்ளன. அதில் தைப்பொங்கல், மாட்டுப்பொங்கல், நவராத்திரி, சிவராத்திரி, தீபாவளி, தமிழ் புத்தாண்டு என்பவை தமிழர்கள் கொண்டாடும் விழாக்கள் ஆகும். எல்லா விழாவிற்கும் தமிழர்கள் அவர்களுடைய குடும்பத்தோடு சேர்ந்து அந்த விழாவை சிறப்பாக கொண்டாடுவார்கள். இந்த விழாக்கள் வரும் போது தான் பெரியோர்கள் அவர்கள் வேலை செய்யும் இடத்தைவிட்டு சந்தோசமாக அவர்களுடைய நண்பர்களோடு சேர்ந்து பகுடி விட்டுச் சிரிப்பார்கள். ஆனால் சிவராத்திரி, நவராத்திரி வரும் பொழுது பக்தியாக சுவாமி கும்பிட்டு, சைவமாக இருந்து அவர்களுடைய ஆசையை கடவு-ளிடம் கேட்டு கும்பிடுவார்கள்.

**தைப்பொங்கல்**

இத்திருநாள் இயற்கையைப் போற்றி வாழ்ந்த தமிழருடைய சிந்தனை வளர்ச்சியால் உருவான நாளாகும். தைப்பொங்கலே வாழ்வில் இன்பங்கள் சேர்கின்றன நாளாகக் கண்டு, ஆண்டுப் பிறப்பாகக் கொண்டு கொண்டாடுவார்கள் தமிழர்கள். சுற்றம் சூழப் பொங்கி, உண்டு பாடிக் கொண்டாடுவார்கள். தைப்பொங்கலன்று வைகறையில் நீராடிப் புத்தாடை புனைவர். முன் வாசலில் கோலமிட்டு நிறைகுடம் வைப்பார். மலர்கள் தூவி தேங்காயும் வைப்பார். பொங்கற்பானைக்கு இஞ்சி, மஞ்சள் இலைகள் கட்டுவார். பானையை மண்ணடுப்பில் ஏற்றி, பசும்பால் ஊத்தி பொங்கலை பொங்குவார்கள். இதுவே தைப்பொங்கல் ஆகும்.

**தீபாவளி**

திபாவளியை சொந்தகாரர்கள் அவர்களுடைய குடும்பத்தினரோடு சேர்ந்து கொண்டாடுவர். இத்திருநாள் எதற்கு கொண்டாடப்படுவது என்றால், அந்த நாளில் கிருஷனர் நரகாசுரனை வதைத்த நாள் ஆகும். தீபாவளியில் மக்கள் புத்தம் புது ஆடையை அணிந்து கோவிலுக்கு சென்று தங்களது வரங்களைக் கேட்டு கும்பிடுவார்கள். குடும்பத்தோடு சேர்ந்து விதம்விதமாக இனிப்பு பலக-ாரம் உண்பார்கள். வீட்டில் இருக்கும் பெண்கள் தங்களது வீட்டிற்கு முன்பாக கோலம் போட்டு ரசிப்பார்கள். இரவு நேரம் வரும் பொழுது தங்களது நண்பர்களுடன் சேர்ந்து பட்டாசு கொழுத்தி சந்தோசமான பாட்டுப்பாடி மகிழ்வார்கள். தீபாவளி என்றாலே மகிழ்ச்சியும் கொண்டாட்டமும் தான்.

**தமிழ் புத்தாண்டு**

சித்திரை மாதம் பதினான்காம் நாள் வருவதே தமிழ் புத்தாண்டு. தமிழ் புத்தாண்டன்று மக்கள் புது ஆடை அணிந்து கோவிலுக்குச் சென்று கடவு-ளைக் கும்பிடுவார்கள். தீபாவளியைப் போல் தமிழ் புத்தாண்டிற்கும் முன் வாசலில் கோலமிடுவார்கள். இனிப்பு பலகாரங்களைச் செய்து சாப்பிட்டு மகிழ்வார்கள்.

தொலைபேசியில் தங்கள் நண்பர்களுக்கு இனிய புத்தாண்டு வாழ்த்துச் சொல்லி, வீட்டு புதினத்தையும் சொல்லி சிரிசிரி என்று சிரித்து தனது தமிழ் புத்தாண்டை கொண்டாடுவார்கள்.

தமிழ் பண்பாட்டில் பல விழாக்கள் இருப்பதால் தமிழர்கள் அனைத்து விழாக்களையும் சிறப்பாக கொண்டாடி சந்தோசமாக இருப்பார்கள். எனவே நீங்களும் இந்த தமிழ் விழாக்களை சிறப்பாக கொண்டாடி மகிழ வேண்டும். தமிழ் கலாசாரத்தை பின்பற்றி இன்வரும் சின்னஞ்சிறுசுகளுக்கு தமிழ் விழாவைப் பற்றிச் சொல்லிக் கொடுத்து கொண்டாடி மகிழ வேண்டும். இந்த விழாக்கள் உறவினர்களோடு உறவாடுவதற்கு உதவுகின்றன.

# நண்பன் இல்லை

—கிரிசிகன் சீவராஜா—

ஒரு அடர்ந்த காட்டில், ஒரு புலி தனியாக வசித்து வந்தது. அதற்கு ஒரு நண்பரும் இருக்கவில்லை. அதனால், அந்தப் புலி காடுமுழுதாக ஒரு நண்பரை தேடித் தேடி அலைந்தும், ஒரு நண்பரும் கிடைக்கவில்லை.

அதன் பின், அது இறைவனை வேண்டி நின்றது. உடனே, இறைவன் அதன் முன் தோன்றி "உனக்கு என்ன வேண்டும்?"என்று கேட்டார்.அதற்கு அந்தப்புலி "இறைவனே! தயவுசெய்து எனக்கு நல்ல நண்பர் ஒரு-வரை தரவேண்டும்" என்று கேட்டது. உடனே இறைவன். " நாட்டுப்பக்கம் போ. அங்கே உனக்கு ஒரு நல்ல நண்பன் காத்திருப்பார்." என்று சொல்லி மறைந்தார். அதைக்கேட்ட புலி உடனே அங்கிருந்து நாட்டுப்பக்கம் சென்றது.

அந்தப்புலி நாட்டுப்பக்கம் போகும்போது, மனிதர்கள் அதைக்கண்டு பயந்து ஓடினார்கள். அதைப்பார்த்து அந்தப்புலி மிகவும் மனம் வருந்தியது. பின்பு, அது ஒரு பாட்டி வீட்டிற்கு சென்றது. அங்கே புலியைக்கண்ட பாட்டி பயம் இல்லாமல் "உனக்கு பெற்றோர்கள் இல்லையா?, இப்போது ஏன் இங்கு வந்தாய்?,என்ன வேண்டும்?" என்று கேட்டார். அதற்கு அந்தப்புலி "எனக்கு பெற்றோரும் இல்லை,உற்றாரும் இல்லை. அதனால் எனக்கு ஒரு நல்ல நண்பன் வேண்டும் என்று வந்தேன்." என்றது. உடனே பாட்டி "அப்படியா? ,சரி. நீ என் நாயுடன் நல்ல நண்பனாக இருக்கலாம்." என்றார். அதன்பின் புலி, பாட்டியின் நாயுடன் நண்பராகியது. முதலில் நாய், புலியைப் பார்த்து



பயந்தாலும், பின்பு மெதுவாக புலியுடன் நண்பராகியது. அதன்பின், நாயும் புலியும் மிக்கநல்ல நண்பர்களாகவே சேர்ந்து விளையாடி மகிழ்ச்சியாக இருந்தன.

நாம், யாரையும் வெளி உருவத்தைப் பார்த்து தவறாக எண்ணாமல், உண்மையான அன்பு உள்ளத்தைப் பார்த்து பழக வேண்டும் என்பதைப் புரிந்து கொள்வோமாக."

# துடுப்பாட்டம்

–நிருஜன் விஜயராஜன்–

விளையாட்டுக்களில் எனக்கு மிகவும் பிடித்த விளையாட்டு துடுப்பாட்டம். துடுப்பாட்டம் விளையாடுவதற்கு ஒரு அணியில் பதினொரு வீரர்கள் வேண்டும். துடுப்பாட்டம் விளையாட மட்டை, பந்து மற்றும் விக்கட்டுக்களும் வேண்டும். நாணய சுழற்சியில் வெற்றி பெறும் அணியின் தலைவர் முதலில் துடுப்பாட அல்லது பந்து வீச முடிவு செய்வார். முதலில் துடுப்பாடும் அணியின் நோக்கம் கூடிய ஓட்டங்களை எடுத்து பந்து வீசும்போது எதிர் அணியின் விக்கட்டுக்களைக் கைப்பற்றி குறைவான ஓட்டங்களை எடுக்க வைப்பதே ஆகும்.



துடுப்பாட்ட விளையாட்டில் பொதுவாக டெஸ்ட் போட்டி, சர்வதேச ஒரு நாள் போட்டி மற்றும் 20/20 என்று விளையாடப்படும். சர்வதேச ஒருநாள் உலகக்கிண்ண துடுப்பாட்ட போட்டிகள் நான்கு வருடங்களுக்கு ஒரு முறை நடைபெறும்.


இறுதியாக நடந்து முடிந்த சர்வதேச ஒரு நாள் உலகக்கிண்ண துடுப்பாட்டப் போட்டிகளில் ஆஸ்திரேலியா, நியூசலாந்து, இந்தியா, பாக்கிஸ்தான், வங்காளதேசம், இங்கிலாந்து, தென் ஆபிரிக்கா, இலங்கை, அயர்லாந்து, ஸ்கொட்லாந்து, சிம்பாபே, மேற்கு இந்திய தீவுகள், ஆப்கானிஸ்தான் மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் ஆகிய நாடுகள் பங்கு பற்றின. இறுதிப் போட்டியில் விளையாடிய எம் நாட்டு ஆஸ்திரேலியா அணி, நியூசிலாந்து அணியை வென்று உலகக்கிண்ணத்தை தனதாக்கிக் கொண்டது.

நானும் கடந்த மூன்று வருடங்களாக கழகம் ஒன்றில் பதினொரு வயதிற்கு உட்பட்ட துடுப்பாட்ட அணியில் விளையாடி வருகிறேன். எனக்கு மிகவும் பிடித்த துடுப்பாட்ட அணி, ஆஸ்திரேலியா. நான் விடுமுறை நாட்களில் எனது நண்பர்களுடன் விளையாடுவேன்.

# பாரதி பள்ளி

–கவின்–

பாரதி பள்ளியில் நிறைய மாணவர்கள் படிக்கிறார்கள். பாரதி பள்ளியில் ஒரு விளையாட்டு மைதானம் இருக்கிறது. பாரதி பள்ளியில் ஒரு மண்டபம் இருக்கிறது. பாரதி பள்ளியில் உணவு விடுதி, உடற்பயிற்சிக் கூடம், இசைக் கூடம், கணணிக் கூடம் இல்லை. பாரதி பள்ளி நல்ல பாடசாலை.




# நான



எனது பெயர் பிரநிங்கா.

எனது வயது ஒன்பது.

நான் நாலாம் வகுப்பில் படிக்கிறன்.

எனது குடும்பத்தில் 4 அங்கத்தவர்கள் உள்ளனர்

எனது விருப்பமான நிறம் மஞ்கள்

எனது விருப்பமான சாப்பாடு அப்பம் ஆகும்

எனதுவருப்பமான மிருக்கம் பென்குயின்

நான் ஸ்ப்பிறிங்வெல் செண்ட். ஜோசப் பாடசாலையில் படிக்கிறேன்

நான் நோபில் பார்க் வசிக்கிறோம்

# காத்திருப்பாள் தொலைதூர தென்றலுக்காய்!



–தூட்சாயனி சந்திரன்–

காத்திருப்பாள் தொலைதூர தென்றலுக்காய்
கண்ணீரின் கால்தடங்கள்
கண்களில் போலி வேடங்கள் கயவரின் கல்லடிகள்
உற்றாரின் சொல்லடிகள்
இருப்பினும் காத்திருப்பாள்
தொலைதூர தென்றலுக்காய்

அன்னையின் அன்பு போதவில்லை
தந்தையின் வார்த்தையில் ஈரமில்லை
அக்காளின் அரவணைப்பும் கிடைக்கவில்லை
தம்பியின் பாசமும் எட்டவில்லை
ஆதரிக்க அண்ணன் இல்லை
இருப்பினும் வேண்டியது வேண்டிக் காத்திருப்பாள்
தொலைதூரத் தென்றலுக்காய்

நிமிடங்கள் என்றுமே வருடங்கள் ~அவள்
வதனம்கண்டது கண்ணீர்மட்டுமே
நண்பர்கள் வந்தனர் நடிகர்களாய்
நாடகம் முடிந்ததும் விட்டுப் போயினர்
ரணங்கள் தடங்கள் அவள் மனதினில் பதியினும்
பதறாது காத்திருப்பாள்
தொலைதூரத் தென்றலுக்காய்

உலகில் உருவம் ரசிப்போர் பலர் உள்ளம்
உணரவில்லை
உருவத்தைப் பார்க்கும் மானிடர் அன்றவள்
உள்ளம் மதித்திருந்தாள்
உடலழிந்து உளம் சோர்ந்து அவள் வாட
வேண்டியதில்லை
இருப்பினும் கண்ணீரால் காயங்கள் ஆற்றி
காத்திருப்பாள்
தொலைதூரத் தென்றலுக்காய்

சொல்லில் விடம் வைத்த மனிதர் அவள்
நெஞ்சிலும் ஈட்டியை பாய்சினார்
குருதியின் அலறல் கண்டு உதித்ததோர்
அன்புக்கரம்
தாலாட்டும் இனிய பாசத்துக்காய் எத்தனை யுகமும்
காத்திருப்பாள்
தொலைதூரத் தென்றலுக்காய்

அன்பினைப் பார்க்கும் விழிகள் பல பயன்ற்ற
பார்வைகளாயின அத்தனை தடர்கள் கடந்தும்
~இனி
எத்தனை இடர்கள் வரினும் எதையும் தாங்கும்
இதயமதை
தனது உடமையாக்கி காத்திருப்பாள்
தொலைதூரத் தென்றலுக்காய்

நிஜயங்கள் செத்துப் போனாலும்
நினைவுகள் என்றும
மறக்கப் போவதில்லை
அவள் நிழல் கூட தூய அன்பிற்கே சாயும்
இல்லையேல்
இந்த நிலை கெட்ட மானிடர் மத்தியில் மண்ணிலே
அவள்
உடல் சாயும் இருப்பினும் நம்பிக் காத்திருப்பாள்
தொலைதூரத் தென்றலுக்காய்

களவாடும் கண்கள் ~அவள் உளம் நாடி
இருந்தாள்
சடமாக வேண்டியதில்லை அவள் மென்மனம்
கால்கள் சோர்ந்தாலும் காலமெல்லாம
காத்திருப்பாள் அத் தொலைதூரத் தென்றலுக்காய்

காலங்கள் மாறினாலும
கோலங்கள் சிதைந்தாலும்
தோற்றங்கள் குலைந்தாலும்
துன்பங்கள் சூழ்ந்தாலும்
உடலது மரிந்தாலும்
உயிரது மறவாது
காத்திருப்பாள் தொலைதூரத் தென்றலுக்காய்

கண்கள் காயும் வரை
கண்ணீர் ஆறும் வரை
உள்ளம் சோரும் வரை
உணர்வுகள் சாயும் வரை
வேண்டியது வேண்டிக் காத்திருப்பாள்
தொலைதூரத் தென்றலுக்காய்

# எனது விருப்பமான விளையாட்டு

–கீர்த்திகன் சிவராஜா–

எனது விருப்பமான விளையாட்டு கால்பந்தாட்டம் ஆகும். அதை உதைபந்தாட்டம் என்றும் சொல்லுவார்கள். நான் என் நண்பர்களுடன் விளையாடு-வேன். உதைபந்தாட்டத்தை பதினொரு விளையாட்டு வீரர்கள் விளையாடுவார்கள். இந்த விளையாட்டுப் போட்டியில் ஒரு மத்தியஸ்தர் மைதனத்தில் உள்ளேயும் இருவர் இருபக்க எல்லைகளிலும் இருப்பார்கள். விளையாட்டு முடிவு தொன்னூறு நிமிடங்களில் தெரியும்.

பாடசாலையின் இடையேயும் இப் போட்டிகள் நடைபெறும். அதைத் தவிர கழகங்களின் இடையேயும் இப் போட்டிகள் நடைபெறும். மாவிட்ட அளவிலும் இப் போட்டிகள் நடைபெறும். அதற்கு பின் மாநில அளவிலும் இப் போட்டிகள் நடைபெறும்.இப் போட்டிகளில் நன்றாக விளையாடும் வீரர்கள் தேச அளவிற்கு தெரிவு செய்யப்பட்டு சர்வதேச போட்டிகளுக்கு விளையாடுவார்கள். உலக நாடுகள் பலவற்றிலிருந்து உலக கிண்ணத்திற்கான போட்டியில் விளையாடுவார்கள். இந்தப் போட்டி ஒவ்வொரு நான்கு வருடங்களின் ஒரு முறை நடைபெறும்.

கடைசியாக 2014ம் ஆண்டு உலக கோப்பைக்கான போட்டி பிரேசில் என்ற நாட்டில் இறுதிப் போட்டி நடந்தது.



இந்த இறுதிப் போட்டியில் ஜேர்மனியும் ஆஜேன்ரீனாவும் விளையாடின. இறுதியாக இவ்வுலக கிண்ண போட்டியில் ஜேர்மனி வெற்றி பெற்றது.

2018ம் ஆண்டில் நடக்கும் போட்டியில் அவுஸ்திரேலியா வெற்றி பெறும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. அதனால் எனது விருப்பமான விளையாட்டு கால் பந்தாட்டமாகும்.

# பிரசவம்

–சுகி வித்தியா–

பிரசவ வலியால்த் துடிக்கும் தன் மனைவியிடம் நீ ஒன்றுக்கும் யோசிக்காதே நான் உன் கூடவே இருக்கிறேன் நீ எதற்கும் கவலை கொள்ளாதே என ஆறுதல் வார்த்தைகளை அள்ளி வீசுகிறான்.
அதோடு அவன் நிற்கவில்லை சுடுநீர்ப் பையை எடுத்து வந்து அவள் முதுகுகளுக்கு ஒத்தணம் கொடுக்கிறான் தைலத்தை எடுத்து இதமாக மாசாஜ் செய்கிறான் அவள் சோர்வடையாமல் இருக்க நீரைப் பருக்குகிறான் வலி உச்சக்கட்டத்தை தொடுவதை அவளால் உணர முடிந்தது. சரியான நேரம் பார்த்து வந்தனர் தாதிப் பெண்கள் அவள் ஓர் கட்டிலில் படுக்கவிடப்பட்டாள் அவன் அவளருகே ஆறுதல் வார்த்தைகளால் அவளைச் சோர்வடையாமல் பார்த்துக் கொண்டிருக்கிறான்.

பயத்தால் இருவருக்கும் வேர்த்துக்கொட்டுகிறது தாதிமார் அவளுக்கு உதவிகள் செய்ய ஒரு பெரும் போராட்டம் அங்கே நடந்து கொண்டிருக்கிறது வெற்றி,தோல்வியைப் பற்றிப் பேச்சில்லை ஆனால் போராடியே ஆகவேண்டும். நீண்ட போராட்த்தின் பின் அவர்களின் கனவுக் குழந்தையை நேரில்ப் பார்த்தனர் சொல்லவா



வேண்டும் அவர்கள் சந்தோசம்பற்றி தாதிப்பெண் அவனை அழைத்துத் தொப்புள்க் கொடியை அறுக்கும்படி கூற அவன் தயக்கத்துடன் வெட்டி விடுகிறான் குழந்தையும் மண்ணுலகம் வந்ததை எண்ணி அழ ஆரம்பித்தது குழந்தையைக் குளிப்பாட்டி குழந்தையின் சுகத்தை ஊர்ஜிதம் செய்ய வைத்தியரும் அங்கு வந்து சேர்ந்தார். அவனோ மனைவின் கைகளை தன் கைககளால் இறுகப்பற்றி அவள் கைகளுக்கு கண்ணீருடன் முத்தமிட்டான் அவளும் பதிலுக்குச் சிறு புன்னகையுடன் முத்தமிட்டாள் குழந்தைக்கு எந்தப் பிரச்சனையுமில்லை என வைத்தியர் வாழ்த்துச் சொல்லி குழந்தையைக் கொடுக்கவும் இருவரும் குழந்தையை வாங்கி ஆசையாக முத்தமிட்டனர்.

# நானறிந்தவை .....

–லக் ஷிராம் கிரிதரன் –

அன்பு என்றால் அம்மா.
பாசம் என்றால் அப்பா
அரவணைப்பு என்றால் பாட்டி
கண்டிப்பு என்றால் தாத்தா
குறும்பு என்றால் தம்பி

பக்தி என்றால் இறைவன்
கல்வி என்றால் ஆசான்
இனிமை என்றால் பாடல்
குளிர்மை என்றால் தென்றல்
வாழ்க்கை என்றால் சக்கரம்

# பாரதி பள்ளி 20வது ஆண்டு நிறைவு விழா

–சண்முகம் கவிஷ்–

எங்கள் பாரதி பள்ளியில் இருபதாவது ஆண்டு நிறைவு விழா நடைபெற்றது. அதில் பல விளையாட்டு நிகழ்ச்சிகள் இடம் பெற்றன. அதில் நான் கலந்து கொண்டேன்.


அன்று ஞாயிற்றுக்கிழமை, என் அம்மா என்னை அங்கு அழைத்துச் சென்றார்கள். அங்கே நான் என் நண்பர்களைப் பார்த்தேன். என் பள்ளி முதல்வர், ஆசிரியர்கள் மேடையில் பல நிகழ்ச்சிகளை நடத்தினர். அதை அனைவரும் கண்டு களித்தனர். பல நினைவு பரிசுகள் வழங்கப்பட்டது. இது முடிந்தவுடன் நண்பர்களுடன் விளையாடச் சென்றேன். அங்கே நிறைய விளையாட்டு சவாரிகள் இருந்தன. அங்கு ஒரு மாதிரி பண்ணை இருந்தது. அதில் மாடு, ஆடு, கோழி, முயல், வாத்து, பன்றி மற்றும் பல வீட்டில் வளர்க்கும் பிராணிகள் இருந்தன. அவற்றை தொட்டுப் பார்த்து விளையாடி மகிழ்ந்தோம்.

விளையாட்டு சவாரிகளில் நானும் என் நண்பர்களும் பல முறை ஏறி விளையாடி சந்தோசமாக இருந்தோம். அங்கே பல உணவு பண்டங்களை விற்கும் கடைகள் இருந்தன. அவற்றில் பல சுவையான உணவு பண்டங்கள் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தது. நானும் என் நண்பர்களும் உணவு பண்டங்களை வாங்கி உண்டு மகிழ்ந்தோம்.

பிறகு பொழுது சாய்ந்ததும் என் அம்மாவுடன் வீட்டிற்கு திரும்பினேன். அன்றைய தினம் எனக்கு இனிமையாக கழிந்தது.



# கனவுகள் --------



—வடலயூர் சுதன்—

நல்லூர் முருகன் கோயில் திருவிழா ஆரம்பித்து ஒரு வாரம் கடந்து விட்டது. ஒரு நாளேனும் கோயில் பக்கம் போகவில்லை. இதனால் முருகனுக்கு அங்கு அர்ச்சனை நடக்கிறதோ இல்லையோ தினமும் எமது வீட்டில் எனக்கு அர்ச்சனை. இன்று எப்படியும் சென்று விடுவது என்று ஏற்கனவே எடுத்த தீர்மானத்தின்படி எனது கால்கள் இதமான அந்த மாலைவேளையில் கோயிலை நோக்கி நடந்தன. கோயிலினுள்ளே பூசை நடைபெற்றுக்கொண்டிருந்தது. கோயிலுக்கு உள்ளேயும், அதைவிட அதிகமாக வெளி-யேயும் சனக்கூட்டம் காணப்பட்டது. வீதியின் நீர் குடித்த ஈரநிலம் பாதங்களை முத்தமிட்டு ஒட்டிக்கொண்டது. உற்சவமூர்த்தி வாசல் தாண்டி வெளியே வர சற்று நேரமாகுமென்று எண்ணியவாறு பாதைக்கு இடையூறின்றி ஒரு மரத்தினருகில் ஒதுங்கினேன். சுற்றிலுமுள்ள மக்கள் கூட்டத்தினூடு எனது கண்கள் அலைந்து திரிந்தன. ஆலயச் சூழலில் தவில், நாதஸ்வர ஒலியும், பக்தர்களின் பஜனையொலியும் செவியின் கேள்மீடிறன் எல்லையின் உச்சிப்பகுதியை எட்டிக்கொண்டிருந்தது. எனினும், அதற்குள்ளும் அரை நொடியைக்கூட வீணடிக்காது ஒரு காதைப் பொத்தியவாறு கைத்தொலைபேசியில் உரையாடுகின்ற பரபரப்பான மனிதை-ரப் பார்த்துத் தன்னையறியாது உள்ளம் சிரித்துக்கொண்டது. நாகரிகமாற்றத்தில் ஆண், பெண் விம்பங்கள் மாறி உச்சிக்குடுமியும், ஒரு காதில் தோடும் கொண்ட ஆண்களையும் , கருங்கூந்தலைக் கத்தரித்துவிட்டிருந்த பெண்களையும் பார்த்து விழிகள் வினாக்குறியாகின. ஆங்காங்கே அலைந்த கண்கள் சிறுபிள்ளைகளின் குரல் கேட்டுத் திரும்பின.

அங்கே ஆறுவயது நிரம்பிய ஒரு சி-றுவன் நனைந்த மணலை அள்ளி ஆலயம் அமைக்கும் முனைப்பிலிருக்கிறான். அவன் அதனையமைக்கின்ற ஆர்வத்தையும், சிரத்தையையும் பார்த்தபோது கண்கள் அப்பால் நகர மறுத்துவிட்டன. பிரமிட் வடிவில் கைகளால் மண்ணைக் கூட்டி, அழுத்தி அதனூடாக ஒரு கையை விட்டு அழகாக அங்கொரு வாசலையும் அமைக்கிறான். காதிலிருந்த மஞ்சள் பூவையெடுத்து அதனது உச்சியில் வைத்து அது ஒரு ஆலயமென்ற அடையாளத்தை ஏற்படுத்துகிறான்.



அதனைச் சூழ மண்ணைக் கூட்டி அணையொன்று அமைக்கிறான். அவனது பார்வையில் அது ஆலயத்தின் எல்லைச்சுவராக உள்ளது. குறுகிய நேரத்தினுள் அந்தப் படைப்பாளியின் ஆக்கம் முழுமை பெறுகிறது. அவ-னருகே சற்று அவனைவிட வயதில் மூத்த இன்னொரு சிறுவன் இதை இமைக்காது பார்த்துக்கொண்டிருக்கிறான். அழகாய் அமைத்து முடித்த திருப்தியில் இவன் அவனைப் பார்த்து மெல்லிய புன்னகையை வெளிப்படுத்துகின்றான். அவனும் பதிலுக்குப் புன்னகைக்கின்றான்.

வீதிவழி நடந்துவருவோர் இதனருகே வருகின்றனர். மணலில் ஆலயம் அமைத்த சிறுவனிற்குப் பதற்றம் தொற்றிக்கொள்கிறது. ”ஆ!”என்று கத்துகிறான். நடந்து வந்தவர்கள் குனிந்து பார்த்துவிட்டு அப்பால் விலகிச்செல்கின்றனர். ஓடிவந்த இன்னொரு சிறுவன் இவனது குரல் கேட்டு அதனைச் சிதைக்காது அதன் மேலாகப்பாய்ந்து ஓடுகிறான். அருகில் பார்த்துக்கொண்டிருந்த மற்றைய சிறுவன் அப்பாற்சென்றுவிட இதனை நாலாபுறமும் பாதுகாக்கவேண்டிய பொறுப்பைத்தானே கொண்டவனாக அவதானத்துடன் இருக்கிறான்.

வயோதிபர் ஒருவர் அவன் கட்டிய அணைமீது கால் வைத்துச் செல்கிறார். கண்களில் கோபம் வெளிப்பட அவன் மீண்டும் அந்த அணையை அமைக்கிறான். அமைக்கும்போதே வேறொருவர் மறுபுறமாகக்கால் வைக்க அமைக்கப்பட்ட ஆலயத்தின் ஒரு பகுதி சிதைவடைகிறது. கண்ணீர் இமைவழிஎட்டிப்பார்க்க வாயினுள் எதையோ முணுமுணுத்தவாறே அதனையும் சீர் செய்கிறான். இவ்வாறாக அவனது போராட்டம் சிறிது நேரம் தொடர்கிறது. எனினும், அவனால் நீண்ட நேரம் இவ்வாறு காப்பாற்ற முடியவில்லை. சொற்ப நேரத்திலேயே இன்னொரு பெரிய பாதம் அவனால் அமைக்கப்பட்ட மண்கோயிலை மிதித்துச் செல்கிறது. காப்பாற்ற முடியாத இயலாமை வெளிப்பட அச்சிறுவன் தனது கைகளாலேயே அம் மண்ணைத் தட்டிப் பரவி அப்பாற்செல்கிறான்.

சிதையக் கூடிய மண் கோயிலையமைத்து, அதனைக் காப்பாற்றப் போராடி இயலாத நிலையில் தானே அதனை அழித்துச்செல்கின்ற அச் சிறுவனின் செயலானது மனிதன் தனக்குள்ளே கட்டிக்கொள்ளும் கனவுக் கோட்டையையும், அதனைக் காப்பாற்ற அவனது போராட்டத்தையும், அவனை மீறி அது சிதைக்கப்படுகின்றபோது விரக்தியடைந்து தன்னைத் தானே சிதைத்துக் கொள்ளும் மனிதனின் பரி-தாபகரமான நிலையை உணர்த்துவதாக எனக்குத் தெரிகிறது. அழுத்தமான அந்த சிந்தனையைச் சுமந்தவாறு அப்பால் நகர்கிறேன். ”அண்ணை! அங்காலை தள்ளிப் போங்கோ” என்றொரு குரல். குனிந்து பார்க்கிறேன். அதே சிறுவன் இங்கு ஒரு மண் கோட்டையைக் கட்டி அதற்குக் காவலிருக்கிறான். இவனைப் போலவே இன்னும் சில சிறுவர்கள் ஆங்காங்கே மண் கோட்டைகளுடனும், மண் குடில்களுடனும் அவரவர் எண்ணங்களுக்கேற்றவாறு காணப்படுகின்றனர்.

# மயக்கம் வேண்டாம் சாருமதி......!



–பாலனந்தினி (காவியா)–

மாலை ஐந்து மணியானதும் அன்றைய வேலை முடிந்து விட்டதென்ற ஆனந்தத்தில் விரைவாக அலுவலகத்தில் இருந்து தனது வீட்டிற்கு கிளம்பினாள் சாருமதி. சாருமதி "பி. காம்" படித்து முடித்து விட்டு அவளின் வீட்டிற்கு அருகில் இருக்கும் ஒரு சிறிய கம்பனியில் அசிஸ்டன்ட் அக்கௌன்டன்ட் ஆக வேலை பார்த்து வருகின்றாள். சாருமதி வேலை செய்து தான் பிழைக்க வேண்டிய நிலையில் இல்லை. அவளுக்கு ஒரே ஒரு அக்கா மட்டும் தான். அவளும் திருமணமாகி அமெரிக்காவில் வசிக்கின்றாள்.. அவளது தந்தை அவளது ஊரில் உள்ள பணக்காரர்களில் ஒருவர். தனது பொழுது போக்கிற்காக மட்டும்தான் அவள் வேலை செய்து வருகின்றாள்.

வீடு சென்ற சாருவுக்கு எப்போது மாலை ஏழு மணி ஆகும் என்று இருந்தது. அடிக்கடி கடிகாரத்தை நோட்டம் விட்டு க்கொண்டு இருந்தாள் அவள். ஏனென்றால் அவளுக்கு பிடித்த கவிஞன் கார்முகிலனின் பேட்டி நேரடியாக ஒளிபரப்பாகும் என்று நேற்றே அறிவித்து இருந்தார்கள்.மாலை ஆறு ஐம்பத்தைந்து ஆனதும் தொலைக்காட்சின் முன்னர் அமர்ந்து கொண்டாள் அவள். முதல் முதலில் அவனை நேரடியாக தொலைகாட்சியில் பார்க்க போகின்றாள். சாதாரணமாக அவனது கவிதை புத்தகங்கள் எங்கு கிடைத்தாலும் உடனடியாக வாங்கி விடுவாள். அவள் அவனது புத்தகங்களை வாங்குவதற்கு ஒருபோதும் கணக்கு பார்ப்பதே இல்லை. சில சமங்களில் மாதத்திற்கு ஐயாயிரம் ரூபா வரைக்கும் கூட அவனது புத்தகங்களை வாங்கி விடுவாள்.

அவளது அம்மா கூட அடிக்கடி அவளுடன் கோபித்து கொள்வார். "ஏன்டி சாரு என்ன உனக்கு பைத்தியமா பிடித்து இருக்கின்றது?, பாடப்புத்தகங்களுக்கு செலவழிக்க வேண்டிய பணத்தை எதற்காக கவிதை புத்தகங்களுக்கு செலவளிக்கின்றாய்?" என்று கடிந்து கொள்வார்.அவள் யார் சொல்வதையும் ஒருபோதும் காதில் வாங்கி கொள்ளவே மாட்டாள். அவளையும் அறியாமல் அவனது புத்தகங்களில் ஒரு விருப்பம். ஏன் அவனிலும் கூடத்தான்.

நேரடி ஒலிபரப்பு தொடங்கியதும் அவனை பற்றிய தனிப்பட கேள்விகளுக்கு பதில் அளித்த அவன், "விரும்பும் நேயர்கள் தன்னுடன் தொலைபேசி மூலமாக தொடர்பு கொள்ளலாம்" என்று தெரிவித்தான். அதுவரை அமைதியாக கேட்டு கொண்டு இருந்த சாரு, சடாரென அருகில் இருந்த அவளது வீட்டு டெலிபோனில் இருந்து தொலைக்காட்சி அலுவலகத்துடன் தொடர்பு கொண்டாள். மிகுந்த முயற்சியின் பின்னர் அவனுடன் பேசும் வாய்ப்பு கிடைத்தது அவளுக்கு. "ஹலோ சார் நான் சாருமதி பேசுறேன்" என்றாள் அவள். "சொல்லுங்கள் சாருமதி, நான் கார்முகிலன் பேசுகின்றேன்" என்றான் அவன் "சார் உங்களுடன் பேசுவேன் என்று ஒருபோதும் நினைத்து பார்க்கவே இல்லை", உங்கள் கவிதைகள் என்றால் எனக்கு உயிர் சார்.,

அதுவும் நீங்கள் எழுதிய "ஏன் பெண்ணே நீ சிரிக்கும் அழகை காணத்தானா அந்த பூக்கள் எல்லாம் காலையிலே பூத்திருந்து உனக்காக காத்திருக்கின்றன" என்ற
விதை எனக்கு ரொம்ப பிடிக்கும் சார் . மற்றையது சார் "என் பிரமச்சாரியம் தொலைந்து போனதே உன் ஒரு விழியின் கடை பார்வையிலே" மிகவும் பிடித்த
கவிதைகள் என்றாள் அவள் .

"ரொம்ப நன்றி சாருமதி நீங்க வேற ஏதாவது என் எழுத்தை பற்றி சொல்ல விரும்புகின்றீர்களா?" என்றான் அவன். "ஆமாம் சார்! உங்களை நேரில் பார்த்து பேச ரொம்ப ஆசையாக இருக்கின்றது " என்றாள் அவள். "ஓ அப்படியா ? சரி வருகின்ற சனிக்கிழமை எனது புத்தக கண்காட்சி வவுனியா நூலகத்தில் உள்ளது வாருங்கள்" என்றான் அவன். "சரி நிச்சயமாக வருகின்றேன்" என்றாள் அவள்.

சனிக்கிழமை அதிகாலையிலேயே எழுந்த சாரு தலைக்கு ஷாம்பு போட்டு நன்றாக தலைக்கு குளித்து கொண்டாள். அவளுக்கு பிடித்த ஆரஞ்சும் மரூன் ரெட்டும் கலந்த சுரிதாரை அணிந்து கொண்ட அவள் தனது சுருண்ட நீள கூந்தலை பின்னோக்கி வாரி ஒரு பின்னாடி அழகான கிளிப் மாட்டிகொண்டாள். முகத்தில் லேசாக பவுடரும் பவுடேசனும் போட்டு கொண்ட அவள் கண்ணிற்கு அழகாக மை இட்டுக்கொண்டாள். கருத்த பொட்டை எடுத்து நெற்றியில் ஒட்டி கொண்ட அவள் ஒரு ஆரஞ்சு வண்ண கிறிஸ்டல் மாலையை தனது கழுத்தில் மாட்டி கொண்டாள். மாரூன் ரெட் பேள் வளையலை ஒரு கையிலும் கருத்த அகண்ட பார் உள்ள மணிக்கூட்டை மறு கையிலும் அணிந்துகொண்ட அவள் தன் முன்னே இருந்த கண்ணாடியில் பார்த்ததும் பிரமித்து நின்றாள். அவளால் அவளது கண்களையே நம்ப முடியவில்லை. அவ்வளவு அழகாக தோன்றினாள்.தன் தோற்றத்தில் திருப்தி பட்டு கொண்ட சாரு தனது ஸ்கூட்டியை எடுத்து கொண்டு வவுனியா நூலகத்தை நோக்கி விரைந்து சென்றாள்.

அவளுக்கு அவளை புரிந்து கொள்ளவே முடியவில்லை. எதற்காக இந்த ஆனந்தம் என்றும் புரியவில்லை. கார்முகிலனின் கவிதையை நேசிக்கும் அவள், அவனையும் நேசிக்கின்றாளா ? என்பதில் அவளுக்கு மிகுந்த குழப்பம் இருந்தது. இன்று நேரடியாக அவனுடன் பேசும் போது தன் உணர்வுகளை சொல்லி கொள்ள வேண்டும் என்று எண்ணி கொண்டாள் அவள். அதனால் தான் விழா தொடங்குவதற்கு ஒரு மணி நேரத்திற்கு முன்னரே அவள் அங்கு சென்றிருந்தாள்.

நூலகத்தில் நுழைந்த அவள் அவனை சந்திப்பதற்காக அவன் தங்கி இருந்த அறையை நோக்கி நடந்தாள். அவன் தங்கி இருந்த அறையின் கதவு மூடி இருந்தது. “டொக், டொக்” என தட்டி விட்டு அவனின் அனுமதிக்காக காத்திருந்தாள் அவள்.அவளது மனது பட படவென அடித்துக் கொண்டது. “உள்ளே வரலாம்” என்ற அவனின் குரலில் உள்ளே சென்றாள் அவள். எதிரே கிடந்த மேசையின் பின்னால் இருந்த நாற்காலியில் அமர்ந்திருந்தான் அவன். நேரடியாக பார்த்த அவளுக்கு அவனிடம் பேசுவதற்கு மிகவும் தயக்கமாக இருந்தது.

“ஹலோ சார் நான் தான் சாருமதி” என்றாள் அவள் "ஓ நீங்களா உட்காருங்கள்" என்றான் அவன் "சொல்லுங்கள், என்ன பேச வேண்டும் உங்களுக்கு?" என்றான் அவன் .

அவள் தனது எண்ணத்தை மிகுந்த தயக்கத்துடன் வெளிபடுத்தினாள். மிகவும் பொறுமையாக கேட்ட அவன் “சாரு எதை வைத்து நீங்கள் என்னை விரும்புகின்றீர்கள்?” என்றான் அவன். “இல்லை சார் உங்கள் எழுத்து மிகவும் பிடிச்சு இருக்கு, அதில் நீங்கள் எழுதும் ஒவ்வொரு கருத்தும் மிகவும் நன்றாக இருக்கின்றது” என்றாள் அவள். “இவ்வளவு நல்ல ஒரு கருத்தும், உயர்ந்த நோக்கமும், ரசனையும் உள்ள உங்களை மாதிரி ஒரு கவிஞனை தான், நான் என் கணவராக அடைய வேண்டும் என்று இருந்தேன்” என்றாள் அவள்.

“சாரு நீங்கள் இப்படி பேசுவதால், உங்களுக்கு ஒரு உண்மை சொல்ல போகின்றேன்” என்ற சொன்ன அவன் , ”நீங்கள் நினைப்பது போல நான் திருமணம் ஆகாதவன் இல்லை. நான் இந்த கவிஞனாக அறியபடுவதற்கு முன்னரே திருமணமாகி இருந்தேன். எனக்கு மனைவியும் ஒரு மகளும் இருந்தார்கள். எனது கெட்ட குடிபழக்கத்தின் விளைவால், ஒரு கார் விபத்தில் என் மனைவியை பறிகொடுத்து விட்டு எனது ஒரு காலையும் இழந்து விட்டேன். இப்போது நான் செயற்கை காலில் தான் நடக்கின்றேன்.

நீங்கள் மிகவும் அழகாகவும் சின்ன வயதாகவும் இருக்கின்றீர்கள். என் மேல் வந்தது ஒரு உண்மையான காதல் இல்லை . ஒரு மயக்கம் அவ்வளவு தான் . எனக்கு இப்போது உறவு என்று சொல்லி கொள்ள ஒரு மகள் இருக்கின்றாள் . அவள் தான் என் உயிர் எப்போதும் .நான் இந்த ஜென்மத்தில் சந்தோசமாக வாழ அவள் மட்டும் போதும் என்றான் அவன் .

சாரு உங்களுக்கு ஒரு அண்ணா என்ற இடத்தில் இருந்து ஒன்று சொல்கின்றேன் கேளுங்கள் ஒரு எழுத்தை மட்டும் வைத்து அவர்கள் நல்லவராக இருப்பார்கள் என்று நினைத்து விடாதீர்கள். எழுதுவது ,கவிதை புனைவது என்பது ஒரு கலை.அந்த கலையையும் அவர்களது தனிப்பட்ட வாழ்கையும் இணைத்து ஜோசித்து விடாதீர்கள். ஒரு எழுத்தாளனின் எழுத்துக்கும், அவனது தனிப்பட்ட வாழ்வுக்கும் நிறைய வித்தியாசம் உண்டு . அதை புரிந்து நீங்கள் நன்றாக வாழ் வாழ்த்துகின்றேன் ”என்று சொன்ன அவன் அருகில் இருந்த முச்சக்கர நாற்காலியில் அமர்ந்து கொண்டு அறையை விட்டு வெளியேறினான்.அவன் சென்ற திசையை பார்த்தபடி நின்றாள் சாருமதி!

# எனது பாடசாலை

—வைஷ்ணவி சிவா—

நான் கிரான்பேர்ன் கிழக்கு முதன்மைப் பள்ளிக்கு செல்கிறேன். கிரான்பேர்ன் கிழக்கு ஆரம்பப் பாடசாலை ஒரு புதிய பாடசாலை. இந்தப் பாடசாலை 2011இல் தான் ஆரம்பித்தது.

இந்த பள்ளி ஒரு நிலம் Tne Hunt Club என்று அழைக்கப்படும் இடத்தில் அமைந்துள்ளது. இப் பாடசாலையில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் ஆரம்பக் கல்வியை கற்கிறார்கள்.

இந்தப் பள்ளியின் தலைமை ஆசிரியர் கேரி ரொல்ப். அவர் முதலாக கிரான்பேர்ன் மேற்கு ஆரம்பப் பள்ளியில் தலைமை ஆசிரியராக இருந்தவர். இந்தப் பாடசாலைக்கு இரண்டு துணை தலைமை ஆசிரியர்கள், மிஷேள் ரீக்லீ, லீசா ருக்கா, அவர்களும் கிரான்பேர்ன் மேற்கு ஆரம்பப் பள்ளியில் இருந்து வந்தார்கள்.

இந்தப் பாடசாலையில் ஒரு முக்கிய கட்டிடம் உள்ளது. அந்தக் கட்டிடத்தில் சில வகுப்பறைகள், கலை ஆய்வுக்கும் விஞ்ஞான ஆய்வுக்கும் மற்றும் நூலகம் இணைக்கப்பட்டுள்ளது. எமது பள்ளியின் பிரதான கட்டிடத்தைத் தவிர மேலும் பதி-னாறு சிறியவகுப்பறைகள் விளையாட்டு அரங்கம் இசை பயிலும் அறையும் உள்ளது.

இந்தப் பள்ளியின் மாணவர்களுக்கு விளையாட நிறைய இடம் இருக்கிறது. இந்தப் பெரிய பள்ளியில் சுற்றி வர மூன்று பெரிய பாரிய வெளிகள் உள்ளன. வெளிப்புறத்தில் அழகான சிறிய பூந்தோட்டங்கள் இருக்கின்றன. எனது பாட-சாலையில் ஒரு பெரிய காய்கறி தோட்டம் உள்ளது. இந்தத் தோட்டத்தில் தக்காளி, பீன்ஸ், பட்டானி மற்றும் கரட் உள்ளன. இக்காய்கறித் தோட்டம் மாணவர்களாலேயே பராமரிக்கப் படுகின்றது. எனது பாட-சாலையில் இரண்டு பெரிய விளையாட்டு மைதானங்கள் மற்றும் ஒரு சிறிய விளையாட்டு மைதானமும் உள்ளன.
இது ஒரு அற்புதமான பாடசாலை. எனக்கு இப் பாடசாலையில் நிறைய நண்பர்கள் இருக்கின்றார்கள்.

# பாரதி பள்ளி

—ஹரினி—

பாரதி பள்ளி எனது தமிழ் பள்ளி. நான் தமிழ் படிக்க பாரதி பள்ளி போ-றனான். எமது அதிபர் பெயர் தேவராணி ஆன்ரி. எனது வகுப்பு ஆசிரியர் ஜெயந்தி ஆன்ரி. A1 ஆசிரியர் வித்தியா ஆன்ரி, A2 ஆசிரியர் ஜெயராணி ஆன்ரி, A3 ஆசிரியர் ஆரபி அக்காவும் சத்தியன் மாமாவும்.

என்னுடைய விருப்பமான வேலை வாசிப்பது. நான் சமய பாடமும் படிக்கப் போறனான். எனக்கு நிறைய நண்பர்கள் பாரதி பள்ளியில் இருக்கிறார்கள். எனக்கு பாரதி பள்ளியில் தமிழ் படிக்க நல்ல விருப்பம்.

# இது தான் பாசமா?



–திருமதி கலா சிவகுமாரவேலு–

பத்து வயதான ரோஹித், சந்தியா மதன் தம்பதியினரின் செல்லப்பிள்ளையும் ஏகபுதல்வனும் ஆவான். மதன் ஒரு பிரபல்யமான வங்கியின் முகாமையாளர். எந்த நேரமும் வேலை வேலையென்று திரியவே அவருக்கு நேரம் சரியக இருக்கும். சந்தியாவோ மாதர் சங்கத் தலைவி, ஆதரவற்ற குழந்தைகள் வாழும் காப்பகங்களுக்குச் செல்வதும் அங்குள்ள குழந்தைகளைப் பராமரிப்பதிலுமே பெருன்பான்மை பொழுதைப் போக்குவதன் மூலம், சமூகத்தில் தான் பிரபல்யம் பெற வேண்டும், மற்றவர்களால் மதிக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்துடன் வாழ்ந்து கொண்டிருப்பவள்.

ரோஹித் பாடசாலை செல்கின்ற நேரம் தவிர மற்றைய நேரம் எல்லாம், வீட்டைப் பார்த்துக்கொள்வதும் சமையல் தொடக்கம் அனைத்து வேலைகளையும் செய்கின்ற தெய்வநாயகி அம்மாள் என்னும் வயதன அம்மாவுடனேயே தன் பொழுதைக் கழிப்பான். அந்த அம்மாவும் அவனைக் கண்ணுங் கருத்துமாக அவன் தேவைகள் அறிந்து தாயினும் மேலாக கவனித்து வந்தாள். சுருக்கமாகச் சொன்னால் ரோஹித்திற்கு விருப்பமான உணவு என்ன? அவன் எப்பொழுது தூங்குவான், எப்ப எழும்புவான் என்ற விடயங்கள் கூட சந்தியவிற்குத் தெரியாது. ஆனால் பிள்ளை நன்றாகப் படிக்க வேண்டும் பாடசாலையில் சிறந்த மாணவனாக வர வேண்டும் என்பதில் மட்டும் மிகக் கவனமாக இருந்தாள். படிப்பு விடயத்தில் மட்டுமே அக்கறை காட்டினாள். இதனால் ரோஹித் "நாயகி அம்மா நாயகி அம்மா" என்று ஓயாமல் அவளையே சுற்றி சுற்றி வருவான்.

ரோஹித்தின் வகுப்பில் உள்ள மற்றைய மாணவர்கள் தாங்கள் வார இறுதி நாட்களில் பெற்றோருடன் அங்கு சென்றோம் இங்கு சென்றோம் எனக் கதை கதையாகக் கூறுவதையும், அவர்கள் எப்படி தம் மீது அன்பு காட்டுகின்றார்கள் என ஆசையோடு சொல்வதையும் கேட்க கேட்க அந்த பிஞ்சு மனம் சொல்ல முடியாத வேதனையில் தவிக்கும். தனது பெற்றோர் ஏன் இப்படி இருக்கின்றார்கள் என்ற வினாவிற்கு விடை தெரியாமல் ரோஹித் தவியாய் தவிப்பான்.

அன்று சனிக்கிழமை பாடசாலை விடுமுறை நாள், கொஞ்ச நேரம் கழித்து படுக்கையை விட்டு எழும்பிய ரோஹித் தனது தாயின் அறையை நோக்கி மெதுவாகச் சென்றான். அங்கே சந்தியா எங்கேயோ புறப்படுவதற்கு ஆயத்தமாகிக் கொண்டிருந்தாள். அம்மாவின் அருகில் சென்ற ரோஹித் "அம்மா" எனச் சொல்லியவாறு தாயைக் கட்டியணைத்தான்.

"விடுடா கண்ணா எனக்கு நேரமாகுது கெதியாகப் போக வேண்டும்" என்று கூறியவாறே சந்தியா புறப்பட ஆயத்தமானாள். "அம்மா இன்றைக்குமா போக வேண்டும். தியேட்டரில் எனக்கு விருப்பமான ஆச. Bean உடைய படம் ஓடுகிறது என எனது வகுப்பு நண்பர்கள் சொன்னார்கள்.

என்னைக் கூட்டிக் கொண்டு போங்களேன் அம்மா" எனக் கெஞ்சியபடிக் கேட்டான். "இல்லையடா செல்லம் என்னால் இன்றைக்கு வர முடியாது. இன்று அன்னை திரேசா பிள்ளைகள் காப்பகத்திற்க்குச் சென்று அங்குள்ள பிள்ளைகளுக்கு வேண்டிய உதவிகளைச் செய்து, அவர்களை மகிழ்ச்சிகரமான சூழலில் வைத்திருப்பதற்காக இன்று மாலை வரை அவர்களுடன் பொழுதைக் கழிக்க வேண்டும். போய் அப்பாவைக் கேள்." என்று கூறிய சந்தியாவை சற்று நேரம் பார்த்தபடியே இருந்த ரோஹித், "அம்மா அப்படியானால் நான் ஒன்று கேட்பேன் செய்வீர்களா? என்னையும் கொண்டு போய் அந்தக் காப்பகத்தில் சேர்த்து விடுங்கள். நானும் உங்களுடன் சேர்ந்து மகிழ்ச்சிகரமான சூழலில் விளையாடி மகிழ்கின்றேன்" என்றான்.

மகனின் வார்த்தையைக் கேட்ட சந்தியாவிற்கு உச்சந்தலையில் யாரோ சம்மட்டியால் அடித்தது போலிருந்தது. "தெய்வமே இந்தப் பிஞ்சு உள்ளத்தில் இவ்வளவு சோகமா! ஊர்ப்பிள்ளைகள் மகிழ்ச்சியல் அக்கறை காட்டியளவு என் பிள்ளையின் சந்தோசத்தை ஒதுக்கித்தள்ளி விட்டேனா? எவ்வளவு பாவி நான். நான் பெற்ற மகனின் மனதை உணராத எனக்கு இப்படியொரு சேவை தேவையா?" எனத் தன்னையே நொந்தவளாக, கண்ணீர் வடித்த படியே மகனை வாரி அணைத்து இரு கன்னங்களிலும் மாறி மாறி முத்தமிட்டவாறே "கண்ணா என்னை மன்னித்து விடடா இனி உனக்கு பாடசாலை இல்லாத நாட்களில் நான் எங்கேயும் போக மாட்டேன். என்ற செல்லமே நீ எனக்கு அறிவுக் கண்களை திறந்து விட்டாய் மகனே. உன்னை விடவா எனக்கு சேவை பெரிது?" என துயரம் ததும்பிய குரலில் கூறி அழு-தாள். இதனைப் பார்த்துக் கொண்டிருந்த தெய்வநாயகி அம்மாவின் கண்களிலும் கண்ணீர் அரும்பியது.

அடுத்த ஞாயிற்றுக்கிழமை அம்மாவுடன் கொஞ்சிக் குலாவி விளையா-டிக் கொண்டிருந்த ரோஹித் மெதுவாக அப்பாவின் அறையை எட்டிப்பார்த்தான். அப்பா வங்கிக்குச் செல்லும் போது அணியும் ஆடைகளுடன் புறப்பட ஆயத்தமாகிக்கொண்டிருந்தார். அப்பா என அன்பொழுக அழைத்தவாறு சென்ற ரோஹித், "இன்றைக்கு வங்கி விடுமுறை நாள் அல்லவா? அப்படியானால் இன்றைக்கு ஏன் அப்பா வேலைக்குச் செல்கின்றீர்கள்?" எனக் கேட்டான். "இல்லையடா ரோஹித் இன்றைக்கு பகல் பன்னிரண்டு மணி வரை முக்கியமான வேலையொன்று உள்ளது. அதுமட்டுமல்ல இன்றைக்கு வேலை செய்தால் ஒரு மணித்தியாலத்திற்கு இரட்டிப்புச் சம்பளம் வீதம் தருவார்கள்" என்று மதன் கூறினார்.

"அப்படியா அப்பா, ஒரு மணித்தியாலத்திற்கு எவ்வளவு தருவார்கள்?" என்று ரோஹித் கேட்டான். 1500 ரூபாய் தருவார்கள் என மதன் கூறியதைக் கேட்ட ரோஹித் "அப்பா எனக்கு 500 ரூபாய் தருவீர்களா?" என்று கேட்டான். "ஏன் ரோஹித் உனக்கு அவ்வளவு பணம். அப்படியெல்லாம் தரமு-டியாது." எனக் கோபத்தோடு மதன் கூறிய-தும் அழுத வண்ணம் தனது அறையி-னுள் சென்று கதவை மூடினான் ரோஹித். "ஒரு நாளும் வாய் திறந்து காசு கேட்க மாட்டானே, இன்றைக்கு என்ன? புதினமாக காசு கேட்கின்றானே"


என மனதில் சிந்தித்தவாறு ரோஹித்தின் அறையைத் திறந்து மதன் எட்டிப்பார்த்த பொழுது, அழுதபடியே கட்டிலில் படுத்திருந்தான். அருகில் சென்று அவன் பக்கத்தில் அமர்ந்து அவனது தலையை தடவியபடியே "ஏன் ரோஹித் உனக்கு அவ்வளவு பணம் வேண்டும்? ஏதும் தேவையென்று சொன்னால் நான் வாங்கித்தரமாட்டேனா?" என்று மதன் கேட்டர். "இல்லையப்பா பிறந்தநாள் பரிசாக கிடைத்த பணம் 1000 ரூபாய் என்னிடம் இருக்கிறது. நீங்களும் 500 ரூபாய் தந்தால் மொத்தம் 1500 ரூபாவாகும். அதை நான் உங்களிடம் தருகின்றேன் நீங்கள் ஒரு மணித்தியாலமாவது என்னுடன் இருங்கள் அப்பா" என அழுதபடியே ரோஹித் கூறி-னான்.



மகனின் வார்த்தைகளைக் கேட்ட மதனுக்கு இந்த உலகமே இருண்டது போல ஆகிவிட்டது. "இவ்வளவு நாட்களும் என் அன்புச் செல்வத்தின் உள்ளத்தில் இவ்வளவு கவலைகளும் ஏக்கங்களும் இருந்ததை அறியாத பாவியாகிவிட்டேனே. என்ற பிள்ளைக்குத் தேவையா-னதை எல்லாம் கொடுத்து விட்டேன் என்று என்னை நானே திருப்திபடுத்திக் கொண்டு ஒரு பொய்யான வாழ்க்கை அல்லவா வாழ்ந்துவிட்டேன். பிள்ளையின் தேவையென்ன என்பதை அறியாத மூடனாக வாழ்ந்துவிட்டேனே, பெரிய பதவி இருந்தென்ன? பட்டம் வாங்கியென்ன? இவையெல்லாம் என் மகனின் மனதை அறிய உதவவில்லையே. மகனே எங்கும் படிக்காத பாடத்தை நீ ஒரு கணப்பொழுதில் எனக்கு சொல்லித்தந்துவிட்டாயடா, சிவனுக்கு பாடம் சொல்லிக் கொடுத்த சுவாமிநாதன் மாதிரி நீ என் அறிவுக் கண்களைத் திறந்துவிட்டாய்" என மன-தில் புலம்பியவாறு "ரோஹித் என் அன்புச் செல்வமே இனி எந்த ஒரு விடுமுறை நாளிலும் நான் வேலைக்குப் போகமாட்டேன். உன்னை விட எங்களுக்குப் பெரிய செல்வம் வேறு என்னடா. இனி நீ எங்கு போகவேண்டும் என விரும்புகின்றாயோ, அது தான் மகனே எங்கள் விருப்பமும்." என மகனை ஆரத்தழுவியபடி மதன் கூறி-னார்.

இன்றைய உலகில் இவர்கள் போல எத்தனைப் பெற்றோர் பிள்ளைகளின் மானசீக தேவைகளை உணராது, அவர்களுக்குத் தேவையான உணவு, உடை, கல்வி என்ற மூன்றையும் கொடுத்தால் போதும் எனத் தங்களைத் தாங்களே திருப்திப்படுத்திக்கொண்டு வாழ்கின்றார்கள். தாம் பெற்ற பிள்ளைகளின் மனதில் ஆசை, பாசம் என்ற விருட்சம் வேரோடியிருப்பதை ஏன் உணர்கின்றார்கள் இல்லை. அன்பான பெற்றோர்களே இது உங்கள் கவனத்திற்கு.

**'நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம்'**


எனது மீன்தொட்டி
எனது மீன்தொட்டியில் இருக்கும் மீன்கள் மிகவும் அழகானது. மீன்களுக்கு நான் உணவு போடுவேன். மீன்தொட்டி நீர் அழுக்கடையாமல் பாதுகாப்பேன். நிற நிறமான மீன்கள் வளர்க்கின்றேன். மீன்கள் துள்ளித் திரிவதைப் பார்க்க இன்பமாக இருக்கும்.

டிசாந்த் பொன்ராசா

# பட்டியல்



—சங்கரி அப்பன்—

கார்த்திக் பைக்கை நிறுத்திவிட்டு அந்தப் பிரபல ஸ்வீட் கடையுள் நுழைந்தான். அப்பாவிற்கு ரசகுல்லா பிடிக்கும்.

"மாசம் மாசம் உன் சம்பள நாள் எப்ப வரும்னு இருக்கு"

"ஏம்பா?"

"எல்லாம் ரசகுல்லா சாப்பிடத்தான். உங்கம்மா ஸ்வீட் சாப்பிட பர்மிஷன் தருவதே அந்த ஒரு நாள் தானே"

ரசகுல்லா பாக்கெட் ரெடி ஆகிவிட்டது.

"வேறே சார்"

அம்மாவிற்கு மைசூர்பாக். "இந்தக் கடை மைசூர்பாக் எவ்வளவு ஸா∴ப்ட்டா ருசியா இருக்கு" என்று விரும்பிச் சாப்பிடுவாள். அதுவும் பக்கெட் போடப்பட்டுவிட்டது.

"வேறே சார்"

தம்பி மோகனுக்கு "இட்டாலியன் பிஸ்ஸா..." ஒரு துண்டுகூட ஒருவருக்கும் தராமல் அவனே சாப்பிட்டுவிடுவான்.

"அப்புறம் சார்..."

தங்கை சுதாவிற்கு ஸ்டிராபெர்ரி ஐஸ்க்ரீம். ∴ப்ரிட்ஜுல் வைத்து அவளே அரைக் கிலோவையும் கொஞ்சம் கொஞ்சமாக சாப்பிட்டுவிடுவாள். ஒரு பாக்ஸ் எடுத்து வைக்கப்பட்டுவிட்டது. இனி குழந்தைகள் ரமோலா, அமலா. ஆறு வயதும் நாலு வயதும் நிரம்பிய அவனின் குட்டி தேவதைகள். காரமெல் சாக்லேட்... கிரீம் நிறைந்த கலர் கலர் டிஸைன் போட்ட பெரிய கேக். "அவ்வளவுதான் பில் போடுங்க" அவன் மனசு நிறைந்து விட்டது. பெரிய தொகையை கவுண்டரில் கட்டிவிட்டு பார்சலை மார்போடு அணைத்தபடி வெளி வந்தவன் பைக்கை உயிர்ப்பித்தான். இன்று அவன் வீடு அவனுக்காக காத்திருக்கும். லைட் அடித்தமாதிரி எல்லோர் முகத்திலும் பிரகாசம் தெரியும்.

வாசல் மணியை அடித்தான். பெரியம்மா வந்து கதவு திறந்தாள். அம்மாவின் அக்கா.

"கார்திக், எப்படிடா இருக்கே? இளச்சிட்டியே"

"பெரியம்மா, வாங்க, வாங்க...பெரியப்பா சௌக்கியமா? மேகலாக்கா, வாணியக்கா எப்படி இருக்காங்க?"

"உன் பெரியம்மா இங்கே அவள் கொழுந்தன் மகள் நிச்சயதார்த்தத்திற்கு வந்திருக்கா. ∴பங்ஷன் முடிந்ததும் ஓடிப்போயிடுவா...அவசர விசிட்..." என்றபடி அம்மா வந்தாள். அவன் மனைவி ரமா புன்னகையுடன் வந்தாள். இரண்டு குழந்தைகளுக்கு அம்மா என்று சொல்ல முடியாதபடிக்கு மிகவும் இளமையாக இருந்தாள். கண்களில் நிறைந்த திருப்தி தெரிந்தது. வாழ்க்கையை அவள் வாழவில்லை. அவளால் வாழ்க்கை வாழ்ந்துகொண்டிருந்தது. என்னடா பொல்லாத வாழ்க்கை என்று வசவு வாங்கி சலித்திருந்த வாழ்க்கை, தன் காலரை தூக்கி விட்டுக்கொண்டு பெருமிதப்பட ரமா சந்தர்ப்பம் தந்திருந்ததால் "தாங்யூ ரமா" என்று அது அவளிடம் நன்றி சொல்லிற்று. தந்தையின் கையிலிருந்த பார்சலை பிடுங்கிக் கொண்ட சின்னவள் அமலா, "பார்ப்பம்...பார்ப்பம், அப்பா என்ன வாங்கிட்டு வந்திருக்கான்னு" என்று ராகம் பாடினாள்.

"அமலா... மேனர்ஸ் கத்துக்க. அப்படிப் பிடுங்கக் கூடாது. சமர்த்தா உக்காரு. அம்மா எடுத்துத் தருவேன். சரியா..."

ரமா அவரவருக்குப் பிடித்ததை பேப்பர் ப்ளேட்டில் வைத்துக் கொடுத்து தண்ணீரும் வைத்தாள். அந்த சமயம் தம்பி மோகன் கிரிக்கெட் விளையாடிவிட்டு மட்டையுடன் உள்ளே வந்தான். "ஆஹா... பிஸ்ஸா... தாங்யூ அண்ணா..." என்று முழக்கமிட்டான். ஹால் பூரா தூசி பரவியது.

"டேய்...டேய், முதல்ல போய் கைகால் கழுவிட்டு வா. கொஞ்சம்கூட விவஸ்தையே இல்லை. ரெண்டரை கழுதை வயசாச்சு..." என்று அதட்டினாள் அம்மா. "அண்ணா... அம்மாவின் தொல்லை தாங்க முடியலை. உனக்கும் கெடுபிடி-கள் இப்படித்தான் இருந்ததா என் வய-தில்?..." என்று முணுமுணுத்தபடி புறவாசல் சென்றான்.

"ஆமா... என்னடா கார்த்திக். உனக்குப் பிடித்தது ஒன்றும் வாங்கலையா? ரமாவிற்கும் நாமம் தானா?" என்றாள் பெரியம்மா. சுதா அதிர்வேட்டாக சிரித்தாள்.

"பெரியம்மா... ரொம்ப கரிசன-மா விசாரிக்றீங்க. அவங்க பரிமாறல்கள் எல்லாம் மெயின் ஸ்டீரிம்லே வராது. எல்லாம் அன்டர் க்ரவுன்ட் டிரான்ஸ்சக்ஷன் தான். நமக்குப் புரியாதுங்கோ..."

"ஏன்டி... பரம ரகசியத்தை எல்லாம் ஓபன் டாக் ஆக்குறே?" என்று அவள் தலையில் குட்டினான் மோகன்.

"ஓ... அப்படியா? கூட்டுக் குடும்பத்திலே இது ஒரு த்ரில்தான்" என்று ரசித்துச் சொன்னாள் பெரியம்மா. ரமாவும் கார்த்திக்கும் கண்களால் சந்தித்து அரை நெ-ாடியில் ஒரு டூயட்டே பாடி முடித்துவிட்டனர். கவிதைக்கு வார்த்தைகள் எதற்கு? உதிக்கின்ற சூரியனோடு மென்மையாக படரும் செவ்வான சிவப்பு போல், அன்பான காதல் நெஞ்சங்களில் வண்ணமாக எழும் உணர்வுகள் கீதம் பாடத் தவ-றாது என்று பெரியம்மா நெகிழ்ச்சியுடன் நினைத்துக் கொண்டாள். வீடு... குடும்பம்... சந்தோஷம்... கலாட்டா எல்லாவற்றையும் மனம் குளிர ரசித்தான் கார்த்திக். சம்பள நாள் அவனுக்குப் பிடித்த நாள். குடும்பம் சந்தோஷப்படுவதைப் பார்த்து ரசிக்கும் பாசம் மிகுந்த தலைச்சான் பிள்ளையவன். கார்திக் குடும்பத்தின் மேல் அத்தனை பற்று வைத்திருந்தான். அவன் காதலித்துக் கல்யாணம் பண்ணிக்கொண்ட ரமா அவனுக்கு அனுசரணையாக இருந்தாள். பெரியம்மா கண்களில் நீர் மினுமினுத்தது. எப்படிப்பட்ட தலைச்சான் பிள்ளை.

எப்போதும் கார்திக் அப்படித்தான். எதற்கும் விட்டுக் கொடுப்பான். பொறுப்புடன் நடப்பான். அப்பாவிற்கு சுகர் மாத்திரைகள், அம்மாவிற்கு ப்ரஷர் மாத்திரைகள் தீரும் முன் ரெடியாக வாங்கி வைத்து விடுவான். சம்பளப் பணம் முழுவதையும் அம்மா கையில் கொடுத்து விடுவான். அவன் செலவிற்கென்று ஒரு சின்னத் தொகையை வைத்துக் கொள்வான். "எவ்வளவு சம்பாதிக்கிறோம் என்பது முக்கியமல்ல. உள்ள சம்பளத்தில் குடும்பத்தினரை எப்படி சந்தோஷ மாக வைத்திருக்கணும் என்கிற வித்தை தெரிந்தவன் என் மகன்" என்று பெருமையாக எல்லோரிடமும் சொல்வார் அப்பா. தங்கை சுதாவின் கல்யாணத்திற்கு சீட்டுக் கட்டி சிறுகச் சிறுக முப்பது பவுன் நகைகள் சேர்த்து வைத்தான். தம்பி மோ-கன் இன்ஜுனியரிங் படிக்க கல்விக் கடன் பெற்று முக்கால்வாசி அடைத்துவிட்டான்.

மாதமொருமுறை ரமாவையும் குழந்தைகளையும் எங்காவது அழைத்துச் சென்று சந்தோஷப்படுத்துவான். ரமா கண்களில் நாட்டியமாடும் குதூகலம்தான் அவன் வாழ்வின் ஆதாரமாக இருந்தது. அவர்கள் செல்வச் செழிப்பில் வாழவில்லை. அன்பின் செழிப்பில் நனைந்த அடிக் கரும்பின் இனிமையுடன் வாழ்ந்தார்கள். அவன் தனக்கென்று எப்போதும் வருஷத்திற்கு இரண்டு பேண்ட்தான். "என் சம்பளத்தில் எதையாவது குறைக்க முடியும்னா அது என் தேவைகளைத்தான்" என்பான். "ஏன்டா, நானும்தானே சம்பாதிக்கிறேன். கொஞ்சம் தாராளமா உனக்குன்னு செலவு பண்ணிக்கோ." என்பார் அப்பா, ரிடையர் ஆவதற்கு முந்தி.

"இருக்கட்டும்பா... வருதேன்னு அதி-கச் செலவு பண்ணக்கூடாதப்பா..." என்பான். தனி அறையில் ரமாவை இழுத்து அணைத்தான் கார்திக். தன் பாண்ட் பாக்கெட்டில் இருந்த மல்லிகைப் பூவினை அவள் தலையில் சூட்டினான். மலர்ந்து மணம் பரப்பிய மல்லிகை, அவர்கள் மனசு மலர்ந்து மணப்பதுடன் போட்டி போட முடியாமல் வழக்கம்போல் தோற்றது.
"ரமா... என்னிக்காவது தோணியிருக்கா நான் உன்னை நல்லா வைத்துக் கொள்ளவில்லை என்று..."

அவள் பதிலேதும் சொல்லவில்லை. இந்தக் கேள்வியே அர்த்தமற்றது என்று முகமெல்லாம் எழுதி ஒட்டியிருந்தது.
மறுநாள் லேசாக தூரலடித்துக் கொண்டிருந்தது. கார்திக் பல் விளக்கிக்கொண்டிருந்தான். மணி காலை ஐந்துதான் ஆகியிருந்தது. "பெரியம்மா, ஃபங்ஷன் எட்டுக்குத்தான். இருந்தாலும் இப்பவே கிளம்பினாத்தான் சரியா வரும். வாசலில் ஆட்டோ ரெடி. அம்மாக்கிட்டே சொல்லிட்டுக் கிளம்பலாமா?" "வேண்டானடா, எல்லோரும் தூங்கிட்டிருக்காங்க. டிஸ்டாப் பண்ணனுமா? ஒரு பத்து நிமிஷம் உன் கூட பேசனும் கார்திக்" பால்கனி வந்தார்கள். அந்த மழை மூட்ட கருக்கல் அழியாத வைகறைப் பொழுதிலும் இரண்டொரு நட்சத்திரங்கள் விடாமல் பிரகாசித்தன. இயற்கையின் வனப்பில் ஒரு ஜாலம் தெரிந்தது.

"இந்த நட்சத்திரம் மாதிரி ஜொலிக்கறடா, நீ தனிக்குடித்தனம் போய்விடு. சொல்லவே வருத்தமாயிருக்கு... உன்னிடம் சொல்லாமலே பல காரியங்கள் நடக்குது. சுதாவிற்கு வீட்டோடு மாப்பிள்ளை பார்த்தாச்சு. அடுத்த மாதம் நிச்சயதார்த்தம். மோகன் துபாயில் வேலை கிடைத்துப் போகப் போறான். இதெல்லாம் உனக்குத் தெரியாது. மறைக்கிறார்கள். உங்கப்பா தவிக்கிறார். மோகன் கைநிறைய சம்பாதிக்கப் போறான். இனி உன் தயவு எதுக்கு? உன்னை ஏண-ியா பயன்படுத்திக்கிட்டாங்க. உன்னருமை தெரியாதவங்களுக்காக இனி நீ ஏன் பாடுபடனும்? உன்னை வீட்டை விட்டு விரட்ட போட்ட ப்ளான்தான் உன்கிட்டே எந்த விஷயமும் சொல்லாம இருக்றாங்க நீ.. நீ... எதுக்கு அவமானப்படனும்? தனியாப் போயிடுப்பா"

"பெரியம்மா... நீங்க ஃபங்ஷன் முடிச்சிட்டு வாங்க பேசிக்கலாம். நான் சின்னச் செடியில்லை, வேரேட பிடிங்கிப் போட. ஆலமரம், நிழலா எப்பவும் இருப்பேன்... "

நட்சத்திரம் மறைந்து வானம் தூ ரல் நிறுத்தி பளிச்சிட்டது. இந்தக் கசப்பான சம்பவங்கள் நின்று விடுமா? இந்தப் பிள்ளை

காயப்படாமல் இருக்கணுமே... மரகதம் வேண்டிக்கொண்டாள்.

மரகதம் அடுக்களையில் டப்பாக்களை உருட்டிக்கொண்டிருந்தாள். கையில் ஒரு பேப்பரும் பென்சிலும்.

"என்ன பெரியம்மா உருட்டிட்டிருக்கீங்க? அம்மா எங்கே?"

"காய் வாங்கப் போயிருக்கா... நான் பட்டியல் போடறேன்."

"பட்டியலா?"

"ஆமா, என்னென்ன மளிகைச் சாமான் தேவைன்னு பார்த்து பட்டியல் போடச் சொன்னா உங்கம்மா. கடைக்காரன்கிட்டே போன்லே பட்டியலை வாசிச்சாப் போறுமே. சாமான் வீட்டுக்கு வந்திடும்..."

"பெரியம்மா... நானும் ஒரு பட்டியல் தயாரிச்சிருக்கேன். வாசிக்கவா?"

"அட... அதெல்லாம் கூட செய்வியா? எங்கே வாசி..."

"அப்பா! ஊறுகாய். அது வீட்டிலே இருக்கு."

"கார்திக் என்ன இது? புது மாதிரியான பட்டியலா இருக்கே."

"கேளுங்க. அப்பா" ஊறுகாய் மாதிரி. கட்டாயம் வீட்டிலே இருக்கணும். தேவையானபோது பயன்படுத்திக்கலாம். "

"ஓ... அப்புறம்"

மரகதம் ஸ்வாரஸ்யமானாள்.

"அம்மா! துவரம் பருப்பு. பருப்பில்லாத கல்யாணமாங்கிற மாதிரி அம்மா இல்லாத குடும்பமா? "

"தென்"

"தென்...தங்கை சுதா! கறுப்பு உழுத்தம்பருப்பு. இப்ப நம்ம கூட கலந்திருந்தாலும் கல்யாணம் பண்ணிக் கொண்டு வேறு இடம் போகப் போறா... "

"வீட்டோட இருக்கப் போறாளேடா. சொன்னேனே. "

"பெரியம்மா... அம்மாவோ இல்லே சுதா, மோகனோ எதுவும் சொல்லாட்டியும், அப்பா என்கிட்டே சொல்லீட்டார். சுதாவிற்குப் பார்த்திருக்கிற மாப்பிள்ளை ஹரியை நான் பார்த்துப் பேசினேன். ஆசைக்கு கொஞ்ச நாள் வீட்டோட இருந்திட்டு பிறகு சுதாவை கன்வின்ஸ் பண்ணி கூட்டிட்டுப் போயிடுவாராம்.

"நிஜமாவா சொல்றே? "

"ஆமா, மத்தப்படி வரன் தங்கமான குணம். அப்புறம் தம்பி மோகன் " ஏலக்காய். விசேஷங்களுக்கு பயன்படும், விருந்துக்கு மட்டுமே மணக்கிற வஸ்து. டெய்லி யூஸுற்கு ஆகாது. "

"அப்ப நீ...? "

"உப்பு, ப்ளட் ப்ரஷர் பேஷண்ட் கூட அரை உப்பு சேர்க்காம முடியாது. சாதாரண வஸ்து... ஆனா முதுகெலும்பு போன்றது. இதுதான் எங்க ஸ்டோர் சாமான்... "

"ரமாவை விட்டிட்டியே... "

"இந்தப் பட்டியலை தயாரிச்சதே அவதான். பெரியம்மா, நான் பிறந்தபோது என் அம்மா இறந்திட்டாங்க. எங்கம்மா உங்க தங்கச்சியோட உயிர் ஸ்நேகிதி. ஸ்நேகிதி மகனை தன் மகனா எடுத்து வளர்க்க எத்தனை பேருக்கு மனசு வரும்? நான் கருவிலிருக்கும் போதே அப்பா போயாச்சு. சொந்தங்கள் எல்லாம் விலகி ஓடிட்டாங்க. பொறுப்பெடுத்து வளர்த்தது உங்க தங்கச்சிதான். அவங்கதான் என் அம்மா. தாயன்பை நான் அனுபவிச்சேன். இப்ப தன்னுடைய பிள்ளைகள் வளர்ந்துவிட்டதும் நான் வேஸ்ட்டுன்னு அவங்க நினைக்கலாம். ஆனா நான் அப்படி நினைக்க முடியுமா? எங்கம்மாவோட வீடு எனக்குத்தான். கோடிக்கணக்கிலே பெறும் பொருளை விட்டுச் சென்ற பெற்ற அம்மா... அன்பை ஊட்டி வளர்த்து, வளர்த்த அம்மா. நான் ரொம்ப லக்கி பெரியம்மா.



எனக்கு ரெண்டு அம்மா. பொருளை நேசிக்கிறதா இருந்தா தனியாப் போயிடுவேன். ஆனா என் குடும்பத்தை நேசிக்கிறேன். என் அப்பா, அம்மா, தங்கை, தம்பி இவங்க என்னை அநாதை பட்டியலில் நான் சேராம இருக்க காரணமானவங்க. ஸோ... தாயன்பு காட்டி வளர்த்தவங்களுக்கு நான் செலுத்தக்கூடிய காணிக்கை என் பாதுகாப்பிலே அவங்களை நலமாக வச்சுக்கறதுதான். மோகனும் மாப்பிள்ளையும் சோப்பு மாதிரி கரைஞ்சு போயிடுவாங்க. ரீசார்ஜ்ஜபிள் பாட்டரி மாதிரி நாங்க எனர்ஜுயா இருப்போம் பெரியம்மா.”

“நீ என் தங்கை வயிற்றில் பிறக்காத தலைச்சன் பிள்ளையடா. உன் நல்ல மனசிற்கு அவங்க சீக்கிரமே உன் அருமையை...”

“புரிஞ்சுக்கிட்டேன். எல்லாம் கேட்டேன்.”

காய்கறிப் பையுடன் உள்ளே நுழைந்தாள் குழந்தையிலிருந்தே கார்திக்கை எடுத்து வளர்த்த அனு.

“பட்டியல்லே ஒன்னு நீக்கப்படனும். எது தெரியுமா? சுண்ட வத்தல். இப்ப கசப்பு வேண்டாமே... கண் கலங்கினாள் அனு.

“பட்டியல்லே ஒன்னு சேர்கனுமே...” என்று வந்தார் அப்பா

“என்னது”

எல்லோரும் ஆவலுடன் கேட்டனர்.

“நான் சொல்றேன். எல்லாம் சுபமாக முடிந்ததே. மஞ்சள்...” என்றாள் ரமா. மரகதம் நிம்மதிப் பெருமூச்சு விட்டாள். நாம் விரித்தால்தான் குடை நிழல் தரும். ஆனால் அன்பும் நன்றியும் கலந்த மனம் விரிந்தால் “கேட்காமலேயே நிழல் தரும். எத்தனையோ வருஷத்திற்கு முன் இறந்த தன் ஸ்நேகிதிக்கு நன்றி சொன்னாள் அனு” தனக்கொரு தலைச்சன் பிள்ளையை கொடுத்ததற்காக.

“கார்திக் சூடா இட்லி சாப்பிட வாடா...” என்று தாயன்புடன் அழைத்தாள் அனு, தன் தலைச்சன் பிள்ளையை. நீ செஞ்சதுக்கும் நான் செஞ்சதுக்கும் சரியாப் போச்சு என்று நன்றியுணர்வு வியாபாரப் பொருளாகிவிட்ட இக்காலத்தில் கார்திக் விட்ட மூச்சில் நன்றி உயிர் பெற்றிருப்பதை அனு உணர்ந்தாள். அவன் போட்டது அன்புப் பட்டியல். அவள் போட்டது வியாபாரப் பட்டியல்.

# புத்தகத்தின் சுயசரிதை

–குமார் டிலக்க்ஷிகா–

நான் ஒரு பழைய புத்தகம். ஒரு நாள் என்னை பெரிய புத்தகத் தொழிற்சாலையில் உருவாக்கினார்கள். நான் மிகவும் சந்தோசமாக என் நண்பர்களுடன் இருந்தேன். அங்கு உள்ள வேலையாட்கள் எங்களை வெவ்வேறு புத்தகக்கடைகளுக்கு அனுப்பப்போவதாக நான் அறிந்தேன். பின் நான் அதை என் நண்பர்களுக்குக் கூறினேன். ஆனால் அதை என் நண்பர்கள் நம்பவில்லை.

சில வாரம் கழித்து, எங்களை பிரித்து வெவ்வேறு கடைகளுக்கு அனுப்பினார்கள். நான் மிகவும் கவலையுடன் இருந்தேன். அப்போது ஒரு சிறுமி என்னைப் பார்த்து அவளுடைய அப்பாவுக்கு "அப்பா எனக்கு இந்த புத்தகம் வேண்டும்" என்று கூறி-னாள். பின்னர் அவளுடைய அப்பா என்னை வாங்கி கொடுத்தார். பின் நான் ஆனந்தம் கொண்டேன். அந்த நாள் இரவு அவள் என்னை எடுத்துக்கொண்டு அவளுடைய படுக்கையில் இருந்து என்னை வாசித்தாள். பின் அவள் என்னை படுக்கையிலேயே வைத்து விட்டு நித்திரைக்குச் சென்றாள்.

அடுத்த நாள் காலையில் அவள் என்னை எடுத்து அவளுடைய புத்தகப் பெட்டியில் போட்டாள். நான் மி-கவும் சந்தோசமாக இருந்தேன். அந்தப் பெட்டியில் நான் எனது பழைய நண்பனைச் சந்தித்தேன். அங்கு அவள் அவளுடைய பழைய கதைகளைச் சொன்னாள். பின்னர் நானும் என் கதைகளைக் கூறினேன்.

அடுத்த நாள் அந்தச் சிறுமியுடைய தந்தை என்னையும் என் நண்பனையும் எடுத்து வாசித்தார். அப்போது அவருடைய மகள் அங்கு வந்து என்னைப் பற்றிக் கேட்டாள். அதற்கு அவளுடைய தந்தை என்னைப் பற்றி பெருமையாகக் கூறினார். பின் என் நண்பனைப் பற்றிக் கேட்டபொழுது, அவர் என் நண்பனைப் பற்றி பெருமையாகக் கூறவில்லை. பின் என் நண்பன் மிகவும் வருத்தப்பட்டான். நான் அவளுக்கு ஆதரவு கூறினேன்.

சில வாரம் கழித்த பின்னர் அவ-ளுடைய (சிறுமி) அம்மா என்னை எடுத்து வாசித்தார். பின்னர் அவளுடைய அம்மா என்னை புகழ்ந்தார். நான் மிகவும் சந்தோஷ மாக இருந்தேன். சில வருடம் கழிந்த பின் அந்தச் சிறுமி புத்தகப் பெட்டியை தூய்மையாக்குவதற்காக என்னை எடுத்துப் பார்த்தாள். நான் மிகவும் அழுக்காகவும் கறையான் அரித்தும்போனேன்.

பின் அவள் என்னை குப்பையில் எறிந்து விட்டாள். நான் அன்றிலிருந்து கிழிந்துபோன பழைய புத்தகமாகினேன்.




## அத்தியாயம் 6



–சூர்யபுத்திரன்–

முன் கதைச்சுருக்கம்: ஊரிலேயே பெரிய மனிதரும் பணக்காரருமான 72 வய-தான முத்துராஜப்பிள்ளையும் அவருடைய இரண்டாவது சன் நடராஜப்பிள்ளையும் அடுத்தடுத்து கொலை செய்யப்படுகிறார்கள். இன்ஸ்பெக்டர் நவநீதகிருஷ்ணன் தலைமையிலான விசாரணைக்குழுவிற்கு உதவுவதற்காக சிஐடி ஆபீசர் ஆனந்த் எழும்பூருக்கு வருகிறார். சென்னை புதைபொருள் ஆராய்ச்சி மையத்திலிருந்து சிலஆராய்ச்சிகள் மேற்கொள்வதற்காக இந்த ஊருக்கு வந்திருப்பதாகக் கூறிமுத்துராஜப்பிள்ளையின் பங்களா அவுட் ஹௌசில் தங்குகிறார் ஆனந்த். இனி....

போனை அப்படியே போட்டுவிட்டு நெஞ்சைப் பிடித்துக் கொண்டார் சுந்தரமூர்த்தி. பிரகாஷ் அப்படியே அவரைக் கைத்தாங்கலாக அணைத்து சோபாவில் உட்கார வைத்தான். ரிசிவரின் மறுமுனை இன்னும் உயிரோடிருந்தது.

“ஹலோ, யாருங்க பேசறது? பிரகாஷின் குரலில் பதட்டம். மறுமுனையின் குரலைக் கேட்டதும், ”ஓ பரந்தாமனா, நல்ல வேல செஞ்சே. இதோ உடனே பொறப்பட்டு ஜெயா நர்சிங் ஹோமுக்கு வந்திடறேன்”.

ரிசிவரை வைத்துவிட்டு ”பெரியப்பாவுக்கு சின்னதா ஒரு அட்டாக். நல்ல வேளை பரந்தாமன் அவரை நம்ம டாக்டரோட நர்சிங் ஹோம்ல தான் சேர்த்திருக்கான். மாமாவை கவன-மாப் பாரத்துக்குங்க. காவ்யா, நீ Cakeஐ கட் பண்ணும்மா. பெரியப்பாவுக்கு எதுவும் ஆயிடாது. நான் இதோ வந்திடறேன்”. சொல்லிவிட்டு புறப்பட்டவனின் தோளில் தட்டினார் நவநீதகிருஷ்ணன்.

“பிரகாஷ் ஜஸ்ட் ஃப்யு மினிட்ஸ் வெயிட் பண்ணுங்க. உங்க தங்கை கேக் கட் பண்ணினதக்கப்பறம் நானே உங்கள அழைச்சிட்டுப் போறேன். ரொம்ப நாளைக்கு அப்புறமா நடக்கிற சுப நிகழ்ச்சி. எல்லோரோட சந்தோசத்தையும் கெடுத்திடாம பார்த்துக்கணும்”.

“ஆமா பிரகாஷ். இன்ஸ்பெக்டர் சார் சொல்றதுதான் சரின்னு படறது. நீ வேற பதட்டமா இருக்கே. அவரு கூட போவோம். நானும் கூட வர்றேன்”.

சுந்தரமூர்த்தியின் பேச்சுக்கு எல்லோரும் கட்டுப்பட்டார்கள்.

"ஹாப்பி பர்த்டே டியர் காவ்யா" பாடி முடித்து கேக் ஒவ்வொருவரும் காவ்யாவின் வாயில் ஊட்டி விட, "நீங்க பார்ட்டிய காண்டினியு பண்ணுங்க. நாங்க சீக்கிரமா வந்திடறோம்" சொல்லிவிட்டு பிரகாஷும் சுந்தரமூர்த்தியும் இன்ஸ்பெக்டர் கூட கிளம்பிப் போனார்கள்.

ஜெயா நர்சிங் ஹோம் வாசலிலே-யே பரந்தாமன் நின்றிருந்தான்.
"என்னப்பா, என்ன நடந்திச்சு?"

பிரகாஷின் குரலில் பதற்றம் அப்படியே இருந்தது. "ஏர்போர்ட்டில இருந்து பிக்கப் பண்ணறப்ப நல்லாத்தான் இருந்தாரு. காவ்யாம்மா பத்தி ரொம்ப அக்கறையா கேட்டுக்கிட்டே வந்தாரு. திடீரெனெ நெஞ்சைப் பிடிச்சுகிட்டு வலிக்குதுன்னாரு. எனக்கு கையும் ஓடல்ல காலும் ஓடல்ல. ஒரு வேகத்தில அப்படியே நம்ம நர்சிங் ஹோமுக்கு கொண்டு வந்திட்டேன். நம்ம நல்ல நேரம். டாக்டரம்மா இருந்தாங்க."

"நல்ல காரியம் செஞ்ச. நாங்க டாக்டர பார்த்திட்டு வந்திடறோம்". சுந்தரமூர்த்தியைத் தொடர்ந்து அனைவரும் உள்ளே வேகமாக நடந்தார்கள். யாருடனோ டெலிபோனில் பேசிக்கொண்டிருந்த டாக்டர் மரகதம் ராஜசேகர் இவர்களைக் கண்டதும் டெலிபோனை துண்டித்து விட்டு ""வாங்க" என்றார்.

"பெரியப்பா எப்படி இருக்கிறார் டாக்டர். ஆபத்து ஒண்ணும் இல்லியே".
"நான் சொல்றத கொஞ்சம் பதற்றப்படாம கேளுங்க. மொதல்ல எல்லோரும் உட்காருங்க".

மந்திரத்துக்கு கட்டுப்பட்டவர்கள் போல உட்கார்ந்தார்கள்.

"இது செகண்ட் அட்டாக். இதுக்கு முன்னாடி ஒரு அட்டாக் வந்திருக்கு. ஆனா அவரு கேர்லேசா இருந்திருக்காரு. இப்போ மைல்டா ஒரு கோமா stage வரைக்கும் கொண்டு போயிருக்கு. என்னோட எக்ஸ்பிரியன்ஸ்ல அவர் இன்னைக்கோ நாளைக்கோ கண் முழிச்சிடுவாரு. ஆனா சீக்கிரமா பைபாஸ் ஆபரேஷன் செஞ்சாகணும்". அறையில் கொஞ்சம் இறுக்கம் நிலவியது.

"ரியல் எஸ்டேட் பிசினெஸ் பண்ணிட்டிருந்தாரு. இப்ப ஒரு லாஸ்ட் டூ இயர்ஸா ரொம்ப லாஸ்ட் ஆயிட்டாரு.. அந்த டென்ஷன் தான் அவர இந்த நிலைமைக்கு கொண்டு போயிருக்கு". சுந்தரமூர்த்தி சொல்லி முடிக்க, டாக்டர் ஆச்சரியமாகக் கேட்டார்.

"அவரு தான் தனிக்கட்டை ஆச்சே. யாருக்காக இப்படி பறந்து பறந்து உழைக்கிறார்?"

"அது தான் எங்களுக்கு புரியவே இல்ல".

இதுவரை பேசாமல் இருந்த நவநீதகிருஷ்ணன் மௌனம் கலைத்தார்.
"தயவு செஞ்சு உங்க குடும்ப விஷயத்திலே குறுக்கிடறதுக்கு மன்னிக்கணும். ஆஸ் எ போலீஸ் இன்ஸ்பெக்டர் எல்லோரையும் சந்தேகக் கண் கொண்டு பார்க்கிறதும் கேசை எல்லாக் கோணத்திலேயும் ஆராய வேண்டியதும் எங்க டியூட்டி. If you don't mind I need to tell you a secret"

"எதுவா இருந்தாலும் சொல்லுங்க இன்ஸ்பெக்டர். இந்த ரூம்ல வேண்டாதவங்க யாரும் இல்ல. எங்க குடும்ப விவகாரம் தான் தினத்தந்தி வரைக்கும் போயிடுச்சே" சுந்தரமூர்த்தி விட்டேத்தியாகப் பேசினார்.

“மிஸ்டர் கைலாசபிள்ளை பத்தி கொஞ்சம் ரகசியமா சிங்கப்பூர் போலீஸ் உதவியோட தகவல் சேகரிச்சோம். அப்ப தான் ஒரு ஆச்சரியமான உண்மை தெரிஞ்சுது. அவருக்கு ஒரு மலே பொண்ணு கூட திருமணமாகி இரண்டு பசங்க இருக்காங்க. மூத்த பையனுக்கு பதினேழு வயசு. இளைய பொண்ணுக்கு பன்னிரண்டு வயசு.”பிரகாஷும் டாக்டரும் ஆச்சரியத்தின் உச்சியில் இருந்தார்கள்.

“இவருக்கு ஏன் புத்தி இப்படிப் போறது. எங்க அந்தஸ்துக்கும் கௌரவத்துக்கும் ஏத்தாப்பல எங்க ஊரிலேயே எத்தனையோ பொண்ணுங்க இருக்காங்க. ஒரு ஏழை பாழையா இருந்தாக்கூட வேணாம்னா சொல்லப் போறோம். இப்படிப் பண்ணியிருக்காரே”. சுந்தரமூர்த்தி அரற்றினார்.

“சுந்தரமூர்த்தி சார், Control yourself. இப்ப நம்ம எல்லோருக்கும் அவரோட ஹெல்த் தான் ரொம்ப இம்போர்டன்ட். அவரு எழுந்து உட்கார்ந்தா மட்டும் தான் அவர நம்பி இருக்கிற அவரோட பேமிலிய அவரால காப்பாத்த முடியும். இந்த விஷயம் எங்களுக்கு தெரிஞ்சதா அவரு கிட்ட காட்டிக்காதீங்க பிளிஸ்”.

நர்ஸ் அவசரமாகக் கதவைத் தட்டி உள்ளே எட்டிபார்த்தாள். “டாக்டர், பிளட் ரிபோர்ட் வந்திடுச்சு.” நர்ஸ் கொடுத்த ரிப்போர்ட்டை வாங்கிப் பார்த்த டாக்டரின் முகம் கலவரப்பட்டது.

“ஓ மை குட்நெஸ், he made a suicide attempt. கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி மே பி ஏர்போர்ட்ல இருந்து கிளம்பறதுக்கு முன்னாடி அவர் அளவுக்கதிகமா தூக்க மாத்திரை சாப்பிடிருக்கார்”.

டாக்டர் எழுந்து ஓட எல்லோரும் அவசரமாகப் பின் தொடர்ந்தார்கள்.

(தொடரும்)

**இளவேனில் சஞ்சிகைக்கான ஆக்கங்களை**

**அனுப்பி வைக்க வேண்டிய முகவரி :**

Casey Tamil Manram

PO Box 2516,

Fountain Gate,

Vic 3805

**மின்னஞ்சல்:** editor@caseytamilmanram.org.au

# உயர்ந்திடுவோம் வாழ்வினிலே !



-எம். ஜெயராமசர்மா-

அன்புக் குழந்தைகளே
ஆசையுடன் கேளுங்கள்
அமுதான தமிழ்மொழியில்
அமைந்த ஒருநூல்பற்றி

எல்லோரும் வாழ்வதற்கு
ஏற்றபல கருத்துக்களை
இங்கிதமாய் கூறிநிற்கும்
ஏற்றமிகு நூலாகும்

வள்ளுவனார் எனுமாசான்
வழங்கிவிட்ட நூலாகும்
தெள்ளுதமிழ் மொழியினிலே
திகழுகின்ற திருக்குறளாம்

அள்ளஅள்ளக் குறையாத
அரியபல கருக்களையும்
நல்லதமிழ் மொழியினிலே
நமக்களித்து நிற்கிறது

கல்விபற்றிச் சொல்கிறது
செல்வம்பற்றிச் சொல்கிறது
நல்லஅறம் என்னவென்று
நயமுடனே சொல்கிறது

உள்ளமது உயர்வடைய
நல்லவழி சொல்லும்நூல்
உணர்வுடனே கற்றுவிடின்
உயர்ந்திடுவோம் வாழ்வினிலே

ஈரடியால் பலவற்றை
இலகுவாய் விளக்குவது
வாங்கிநீர் படித்துவிடின்
வாழ்வாங்கு வாழ்ந்திடலாம்

பிள்ளைகளே படியுங்கள்
நல்லவுள்ளம் கொண்டிடுவீர்
வள்ளுவரின் குறளுமக்கு
வளம்நிறையத் தந்துநிற்கும் !

